கோகுலம்

GOKULAM

டிசம்பர் 2001

ரூ.6/-





தவறு என்ன?

விடை : தண்ணீர் கூஜாவின் மேற்புறத்தில் குழாய் பொறுத்தப்பட்டுள்ளது.

"நீங்கள் சிக்கலான பிரச்னையைத் தீர்த்து வைப்பீர்களாமே?"


"உங்களுக்கு என்ன சிக்கல்?"

"இந்த நூல் கண்டு சிக்கலாகி விட்டது."

எஸ். மோகன், விருத்தாச்சலம்



ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை : எடையில் உள்ள வளையம் 2. பயில்வானின் கைப்பட்டை 3. ஷூலேஸ் 4. குழந்தையின் வளையல் 5. எடை தூக்கும் கம்பி.

"நீங்க அனுப்புற எல்லாக் கதையும் கரெக்டா திரும்பி வருதே எப்படி?"

"நான் கரெக்டா ஸ்டாம்ப் வச்சில்ல அனுப்புறேன்!"


- எம். வினோத், விருத்தாச்சலம்.



கோகுலம்



● "இன்றிரவு பொன்மாரி பொழியும் சுபவேளை வருகிறது. திருடர் தரும் தொல்லைகளால் அவர்களுக்கு எதிரில் செல்வ மழையை வரவழைத்து விடாதீர்கள்" என்றார் சீடர். குரு அதை ஏற்றாரா? - 18



● நம் ஊரில் பூனை குறுக்கே வந்தால் அபசகுணமாகக் கருதுவார்கள். ஆனால் பூனை கடவுளாக இந்நாட்டில் மதிக்கப்படுகிறது. எந்த நாடு? - 50



● பரமபதம் விளையாடி இருப்பீர்கள். ஆரோக்கிய பரமபதம் விளையாடியதுண்டா? குடும்பத்துடன் ஜாலியாக விளையாடுங்கள்! - 40



● நீங்கள் இதுவரை கேள்விப்படாத கிருஸ்துமஸ் பரிசுப் பொருட்கள் மற்றும் மெழுகுவர்த்தி சடங்குகள் பற்றிய சுவையான தகவல்கள் - 32



● மழை, ஆலங்கட்டி மழையைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் மீன் மழையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? – 74



● நீங்கள் நாட்டியக் கலைஞராகப் பளிச்சிட பிரபல நாட்டியக் கலைஞர் ஸ்ரீநிதி சிதம்பரம் உபயோகமான டிப்ஸ்களை அளித்திருக்கிறார். - 12

மலர்: 19 இதழ்: 11 டிசம்பர் 2001

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். – பாரதியார்

பொற்காசு படுத்தும் பாடு..

கடுமையான கோடை வெயில் கொதித்துக்கொண்டிருந்த நாள் அது. மன்னர் மகேந்திரன் அரண்மனை மாடத்திலிருந்து நகரைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஒருவன் வேகமாக ஓடிக் கொண்டிருந்தான். மன்னர் இவன் தண்ணீர் எடுப்பதற்காக ஓடுகிறான் என்று நினைத்து, அவனைக் கை தட்டி நிறுத்தினார். ஓடுவதற்கான காரணம் கேட்டார்.

"மன்னா! நகரின் தெற்கு நுழைவாயில் கட்டடச் சுவர் இடிந்து கிடக்கிறதாம். அங்கு ஏராளமான தங்க நாணயங்கள் உள்ளதாம். அதில் கொஞ்சம் கிடைத்தால் என் கடன்களை அடைப்பேன். எனவே அதை எடுப்பதற்காக ஓடுகிறேன்" என்றான் அவன்.

மன்னர் "நீ அங்கு போக வேண்டிய அவசியம் இல்லை. உனக்குப் 10 பொற்காசுகள் தருகிறேன்" என்றார்.

"சரி! நான் அதை வாங்கிக் கொள்கிறேன். ஆனாலும் அங்கு போனால் மேலும் சில பொற்காசுகள் கிடைக்கும். என் மனைவிக்கு ஆபரணம் செய்து போடுவேன்" என்றவன் திரும்பவும் ஓடத் துவங்கினான்.

உடனே மன்னர் "உனக்கு 100 பொற்காசுகள் தருகிறேன், ஓடாதே" என்றார்.

"சரி! அதையும் வாங்கிக் கொள்



கிறேன். ஆனாலும் அங்கு போனால் ஒன்றிரண்டு பொற்காசுகளாவது அதிகம் கிடைக்கும். அது லாபம் தானே'' என்று பிடிவாதமாகச் சொன்னான். மன்னருக்கு எரிச்சல் ஒரு பக்கம். ஆனால் கொஞ்சம் வயதான ஆள் என்பதால் பரிதாபம். ''இந்த வெயிலில் போய் உயிரை விடாதே. வீட்டுக்குப் போ. உனக்கு ஆயிரம் பொற்காசுகள் தருகிறேன்'' என்றார் மன்னர். ''சரி! அதையும் வாங்கிக் கொள்கிறேன். ஆனாலும் அங்கு போனால்...'' ஓடியவன் செக்கு மாடு மாதிரி மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்ல மன்னர் ஒரு படி மேலே போனார்.

''உனக்கு என் நாட்டில் பாதியைத் தருகிறேன். ஓடுவதை நிறுத்து'' என்றார், மன்னர்.

அவனும் ஓட்டத்தை நிறுத்த ஒப்புக் கொண்டான்.

''உனக்கு நாட்டின் எந்தப் பாதி பகுதி வேண்டும்? கேள்'' என்றார் மன்னர். ஓட்டத்தை நிறுத்தியவனோ'' ''மன்னா! எனக்குத் தெற்குப் புற நுழைவாயில் கிடைக்கிற மாதிரி பாதி பகுதி கொடுங்கள். அப்போதுதான் எனக்குக் கொஞ்சமாவது பொற்காசுகள் கிடைக்கும்'' என்றான் அமைதியாக.

மன்னர் அடுத்த நிமிடமே மயங்கி விழுந்தார்.

— எஸ். மஞ்சுளா,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர்
மேல்நிலைப்பள்ளி,
அரும்பாக்கம்.



சீரக மிட்டாய்

மிட்டாய் நல்ல மிட்டாய்தான்
மிளகு வடிவ மிட்டாய்தான்
எட்டு அணா காசிலே
இருக்கும் சின்ன மிட்டாய்தான்!


பட்டாம் பூச்சி நிறத்திலே
பல வண்ண மிட்டாய்தான்
சிட்டாய்ப் பறந்து வாருங்கள்
சீரகம் சேர்ந்த மிட்டாய்தான்!


சீர கத்தைச் சேர்க்கின்ற
சின்ன மிட்டாய் என்கிற
கார ணத்தால் நீயுமே
கணக்கில் லாமல் தின்னாதே!


தின்னும் போது இனித்திடும்
திரும்பத் திரும்பத் தின்னாதே!
சும்மா தின்றால் பற்களும்
சொத்தை யாகி விழுந்திடும்!

— அருப்புக்கோட்டை செல்வம்

கஜானா அதிகாரி


வேணு வாரியத்
மன்னர் மகேந்திரர் புதிதாக ஒருவரை கஜானா பாதுகாப்பு அதிகாரியாக்க முடிவு செய்தார்.
கஜானா அதிகாரி புத்திசாலியாகவும் நேர்மையாகவும் இருப்பது அவசியம்.
மறுநாள் -
மகா ஜனங்களே! நம் மன்னர் கஜானா பாதுகாப்புக்குப் புதிதாக ஒருவரை நியமிக்க இருக்கிறார். தகுதியுள்ளவர்கள் மன்னரைச் சந்திக்கலாம்.
மறுநாள் நான்கு இளைஞர்கள் அரண்மனைக்கு வந்தனர்.
நல்ல சம்பளம் கிடைக்கும்னு நினைக்கிறேன்.
ஆமாம்!
மன்னர் கையில் ஒரு பையுடன் இளைஞர்களைச் சந்தித்தார்.
நான் உங்களுக்கு ஒரு சோதனை வைக்கப் போகிறேன். அதில் வெற்றி பெறுகிறவரே கஜானா அதிகாரி.
அரசே! என்ன சோதனை?


இந்தப் பையிலிருந்து விதைகளை எடுத்துக் கொள்ளுங்கள். இதை விதைத்து, செடியாக்கி பூவும் காயுமாக ஆறு மாதத்தில் கொண்டு வந்து காண்பிக்க வேண்டும்.
நால்வரும் விதைகளை எடுத்துக் கொண்டனர்.
இது என்ன பெரிய சோதனை!
நால்வரில் ஒருவன் சந்திரன், மிகவும் ஏழை.
நான் இந்தச் சோதனையில் வெற்றி பெற்றாக வேண்டும்
சந்திரனின் அம்மாவும் விதை விதைக்க உதவினார்.
அம்மா! நம் கஷ்டங்கள் எல்லாம் இந்த வேலையால் தீரப் போகின்றன.
ஆமாம்! சந்திரன்.
மாதங்கள் சென்றன.
என்ன! விதை இன்னும் முளைக்கவே இல்லையே!



சந்திரன் மிகவும் வருத்தப்பட்டான்.
எல்லாம் நம் தலைவிதி சந்திரன்!
ஆறு மாதம் கழித்து, ஒரு நாள்-
சந்திரன்! நீ அரசரைப் பார்க்கப் போகலையா?
போகணும். இதோ கிளம்பறேன்.
சந்திரன் விதை முளைக்காத தொட்டியுடன் அரண்மனைக்குச் சென்றான்.
என்னாச்சு சந்திரன்?
என்னுடைய விதை முளைக்கவே இல்லை.
அப்போது அரசர் அங்கு வந்தார்.
நான் செடிகளைப் பார்க்கலாமா?
அரசே! என் செடி அழகாகப் பூத்திருக்கிறது.



SAI FEATURES, ALUVA 683 107

காண்டாமிருகம்

நிலத்தில் வாழும் விலங்குகளில் யானை, நீர் யானைக்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய விலங்கு காண்டாமிருகம். இவற்றின் உருவம் வித்தியாசமானது. பருத்த உடல், குட்டையான கால்கள், கோணியைப் போர்த்தியது போல் தோல்கள், மூக்குக்கு மேல் ஒற்றைக் கொம்பு என்று விநோத உருவம் கொண்டிருக்கும்.

காண்டாமிருகத்தில் நான்கு பிரிவுகள் உள்ளன. அவற்றுள் கறுப்பு மற்றும் வெள்ளை நிற காண்டாமிருகங்கள் முக்கியமானவை. இவ்விரண்டு காண்டாமிருகங்களும் குணத்தில் வெவ்வேறானவை. கறுப்பு முன் கோபம் கொண்டது. தலை நிமிர்ந்து நடக்கும். வெள்ளை பொதுவாக சாதுவானது. தலை குனிந்து நடக்கும். உடலில் சேற்றைப் பூசிக் கொள்வதால் இந்த இரு வகை காண்டாமிருகங்களின் நிறங்களும் பழுப்பேறிக் காணப்படுகின்றன.

இவற்றின் தோல் மிகவும் தடித்துத் தளர்ச்சியாகத் தொங்கிக் கொண்டிருக்கும். வாலின் நுனியிலும் காதுகளின் விளிம்புகளிலும் தவிர மற்ற இடங்களில் முடி கிடையாது. முகத்தில் மூக்குக்கு அருகில் சிலவற்றிற்கு ஒரு கொம்பு, சிலவற்றிற்கு இரண்டு கொம்புகளுமிருக்கும். அதனால் இப்பிராணிக்கு மூக்குக் கொம்பன் என்ற பெயர் ஏற்பட்டது.

கொம்பு சற்று வளைந்திருக்கும். இது மற்ற பிராணிகளின் கொம்புகள் போல் இருக்காது. முடிக்கற்றைகள் பல ஒன்றாகச் சேர்ந்து கொம்பாக மாறி இருக்கின்றன. இக்கொம்பு புதர்களை வேரோடு பறித்துத் தள்ளும் கருவியாகவும் தன்னைக் காத்துக் கொள்ளும் ஆயுதமாகவும் காண்டாமிருகத்துக்குப் பயன்படுகிறது.

மிகவும் பருத்த உடலுக்குக் கால்கள் குட்டையாகவும் குண்டாகவும் இருக்கின்றன. கால்களில் மூன்று விரல்கள் உண்டு. விரல் நுனியைக் குளம்பு மூடியிருக்கும். இவை வேகமாக நடக்கவும், சிறிது தூரம் வேகமாக ஓடவும் கூடியவை.

இலை, தழைகளைத் தின்பதற்கேற்ற வகையில் இதன் உதடுகள் அமைந்திருக்கின்றன. வெள்ளை காண்டாமிருகம் புல்லையும், கறுப்பு காண்டாமிருகம் இலை, மிளாறுகளையும் தின்கின்றன. காலையிலும், பிற்பகலிலும் உணவு தேடி அலைகின்றன. இரவு நேரத்தில் தண்ணீர் மட்டும் அருந்துகின்றன.


மரங்கள், புதர்கள், முள் செடிகள் உள்ள பகுதிகள், மலைச் சரிவுகளில் இவை வசிக்கின்றன. சேறும் சகதியும் நிறைந்த நீர் நிலைகள் இவற்றிற்கு மிகவும் பிடித்த இடங்கள். காண்டாமிருகம் தான் இருக்கும் இடத்தைச் சுற்றிலும் சாணம் இட்டு, அதைக் காலால் உதைத்து பரப்பும். தன்னுடைய இருப்பிடத்தை மற்ற பிராணிகளுக்கு உணர்த்தவே இப்படி செய்கிறது.

பெண் காண்டாமிருகம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு குட்டியை ஈன்றெடுக்கும். குட்டி தாயின் வயிற்றுக்குள் 17 மாதங்கள் இருக்கும். காண்டாமிருகத்தின் ஆயுட்காலம் 40 ஆண்டுகள்.

இந்தியா, தென்கிழக்கு ஆசியா, சுமத்ரா, ஜாவா மற்றும் ஆப்பிரிக்காவிலும் காண்டாமிருகங்கள் வாழ்கின்றன.

— எஸ். சுஜாதா





• பி.எஸ்.எல்.வி.சி 3



• ஆஷா போன்ஸ்லே

கோகுலம் நியூஸ்

விருது!

இரண்டாயிரமாவது ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது. பிரபல இந்தி பாடகியான ஆஷா போன்ஸ்லேவுக்கு இவ்விருது கிடைத்துள்ளது. இசைக்குயில் லதா மங்கேஷ்கரின் தங்கைதான் ஆஷா போன்ஸ்லே. திரை உலகில் சாதனை படைத்தவர்களுக்கு 1967ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. இரண்டு லட்ச ரூபாய் ரொக்கப் பரிசும், தங்க தாமரையும், சால்வையும் அடங்கியது இந்தத் தாதா சாகேப் பால்கே விருது. ஏற்கனவே லதா மங்கேஷ்கர் இவ் விருதைப் பெற்றுவிட்டார். சகோதரிகள் இருவரும் இவ்விருதைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிவப்பு மழை!

கேரளாவில் கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் சிவப்பு நிறத்தில் மழை பெய்தது. இம் மழை நீரைக் கண்டு மக்கள் பீதியடைந்தனர். அந்த மழை நீரை திருவனந்தபுரத்தில் உள்ள இரண்டு ஆராய்ச்சி நிறுவனங்கள் சோதனை செய்தன. இச்சோதனையிலிருந்து பூக்காத தாவங்களின் இன விருத்திக்குக் காரணமான ஜீவ அணு 'ஸ்போர்'தான் சிவப்பு நிற மழைக்குக் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பி.எஸ்.எல்.வி – சி 3

அக்டோபர் 22ந் தேதி சென்னைக்கு அருகில் உள்ள ஸ்ரீஹரி கோட்டாவிலிருந்து பி.எஸ்.எல்.வி - சி3 ஏவு வாகனம் மூலம் 3 செயற்கைகோள்கள் விண்ணில் ஏவப்பட்டன. இவ்வாகனத்தின் மூலம் ஜெர்மன், பெல்ஜியம், இந்தியா ஆகிய நாடுகளின் செயற்கைகோள்கள் பூமியின் சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டன. வெளிநாட்டு செயற்கைகோள்களை விண்ணில் செலுத்தி வருவதன் மூலம் இந்தியா விண்வெளி ஆராய்ச்சித் துறையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

பிரதமர் பயணம்

பிரதமர் வாஜ்பாய் பத்து நாட்கள் பயணமாக ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறார். ரஷ்யப் பயணத்தின்போது தமிழ்நாட்டில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கான ஒப்பந்தம் கையெழுத்தாக இருக்கிறது. அமெரிக்கப் பயணத்தில் ஐ.நா. பொதுச்சபையில் சர்வதேச தீவிரவாதம் குறித்து உரை நிகழ்த்துகிறார். அங்கிருந்து பிரிட்டனுக்குச் சென்றுவிட்டு இந்தியா திரும்புகிறார் பிரதமர். இந்தியப் பிரதமர் ஒருவர் ஒரே பயணமாக மூன்று வல்லரசு நாடுகளுக்குச் செல்வது இதுதான் முதல் முறை.





பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் விதத்தில் மாதந்தோறும் 2 கைக்கடிகாரங்களைப் பரிசாக வழங்கி வருகிறோம். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பள்ளி முகவரி, வீட்டு முகவரிகளைக் கண்டிப்பாகத் தர வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி இல்லாத படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி 20.12.2001





இந்த மாதப் போட்டி:

இங்கு ஆறு விளையாட்டு வீரர்களின் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வீரர்களின் பெயர்களையும் அவர்கள் எந்த விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதையும் கண்டுபிடித்து வரிசைப்படி எழுதி அனுப்புங்கள்.

ஒவ்வொன்றும் ரூ.500/- மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!

	பெயர்	விளையாட்டு
1.	________	________
2.	________	________
3.	________	________
4.	________	________
5.	________	________
6.	________	________





ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97

பரதநாட்டியக் கலைஞராகப் பளிச்சிட...

ஸ்ரீநிதி சிதம்பரம்



"ஸ்ரீநிதி... நல்ல டான்ஸ் மாஸ்டர் யாருன்னு சொல்லும்மா. என் பொண்ணுக்குப் பரதம் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன்," இப்படி பல தாய்மார்கள் என்னிடம் கேட்டதுண்டு. நானும் ரொம்ப ஸின்ஸியரா பல மாஸ்டர், டீச்சர்களின் பெயரைச் சொல்லுவேன். மயிலாப்பூரில் குடியிருப்பவர் லஸ்கார்னரில் உள்ள டீச்சர் வீட்டுக்குப் பெண்ணை அனுப்ப யோசிப்பார். "ஐயோ... அவ்வளவு தூரம் என் பொண்ணு எப்படி போவா? டீச்சர் வீட்டுக்கு வருவாங்களா?" என்று கேட்பார். நான் வெறுத்துப் போய் 'பார்க்கலாம்' என்று பேச்சை முடித்துக்கொள்வேன். நாம்தான் சிரமப்பட்டு ஒரு கலையைக் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, 'க்லை' நம் வீடு தேடி வராது. முன்பு ஒரு காலத்தில் வீட்டுக்கு வந்தே சொல்லிக் கொடுத்துவிட்டுச் செல்லும் மாஸ்டர்கள் பலர் இருந்தனர் என்பது உண்மைதான். ஆனால் இப்போது பரதம் கற்றுக் கொள்ள பலர் ஆசைப்படும்





நிலையில் ஒவ்வொரு மாஸ்டர்களுக்கும் தேவையான அளவு மாணவர்கள் இருக்கிறார்கள். சில பெற்றோர்கள் பெண்ணுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுப்பதைத் தங்கள் குடும்ப அந்தஸ்தோடும், டாம்பீகத்தோடும் தொடர்புபடுத்திப் பார்க்கிறார்கள். இது மகாத் தவறு. இந்தத் தெய்வீகக் கலையைப் பொறுத்த மட்டில்

பெற்றோர்களுக்கும் ஆர்வம் வேண்டும்; கற்றுக் கொள்ளும் குழந்தைக்கும் ஈடு பாடு வேண்டும்.

மூன்று வயதிலேயே பரதம் கற்றுக் கொள்ளத் துவங்கிவிட்டேன் நான். எங்கள் வீடு இருந்தது பூந்தமல்லி சாலையில். டான்ஸ் மாஸ்டர் இருந்தது சாலி கிராமத்தில். கஷ்டத்தைப் பார்த்தால் கற்றுக் கொண்டிருக்க முடியுமா?

டாக்டர், இன்ஜினியர், வழக்கறிஞர் போல பரத நாட்டியத்தை ஒரு தொழிலாக வைத்துக் கொள்ள முடியுமா? இந்தக் கேள்விக்கு 'ஆமாம்' என்றோ 'இல்லை' என்றோ ஒட்டுமொத்தமாகப் பதில் சொல்ல முடியாது. பரத நாட்டியத் துறையில் உள்ளவர்களில் நபருக்கு நபர் இதற்கான பதில் மாறுபடும். பரதம் என்பது நேரடியாக மக்களைச் சந்தோஷப் படுத்தும் ஒரு கலை. அந்தக் கலையைக் கைக்குள் (காலுக்குள்!) கொண்டு வந்து நீடித்து நிற்க வேண்டுமென்றால் உங்கள் உடலையும் உள்ளத்தையும் இளமையாக வைத்துக் கொள்ள வேண்டும். அதிகபட்சமாக 40 அல்லது 45 வயது வரை ஒருவர் நாட்டிய உலகில் பளிச்சிடலாம்; ஆறு வயது முதலே கற்றுக் கொள்ளத் துவங்கினால் சிகரத்தைத் தொட அவ்வளவு காலம் பிடிக்கும்.

முதலில் சரியான குருவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பரதத்தில் சில பாணிகள் இருக்கின்றன. உதாரணமாக பந்தநல்லூர் பாணி, வழுவூர் பாணி என்றெல்லாம் உண்டு. நாம் தேர்ந்தெடுக்கும் குரு எந்தப் பாணியைப் பின்பற்றுபவர் என்பதை முதலில் தெரிந்து





கொள்ள வேண்டும். எந்தப் பாணியில் கற்றுக் கொண்டாலும் நாட்டியத்தின் அடிப்படை அடவுகள் ஒரே மாதிரியானவைதான். முதலில் ஒரு குருவை, அடையாளம் கண்டு கொண்ட பின், அவ

ரைப் பற்றி அவரது சிஷ்யைகளிடமும் அந்தத் துறையில் உள்ள வேறு பலரிடமும் விசாரிக்க வேண்டும். கற்றுக் கொடுக்கும்போது சென்று பார்க்க வேண்டும். திருப்தியாக இருப்பின் பெண்ணைச் சேர்த்து விட வேண்டும். அப்புறம் தூரத்தைப் பற்றியெல்லாம் கவலைப்படக் கூடாது. நான் கற்றுக் கொண்டது வழுவூர் பாணி. அடுத்து பரத நாட்டியம் என்பது இயந்திரத் தனமாக இயங்கும் ஒரு கலை அல்ல, ஆன்மிகமும் நமது கலாச்சாரமும் இழையோடி இருக்கின்றன. கடவுளை வழிபடும் ஒரு மார்க்கமாக நாட்டியக் கலை விளங்குகிறது. பக்தி பாவத்தை வெளிப்படுத்தும் உன்னதக் கலை இது. எனவே பரதநாட்டியம் பயிலும் சிறுவர்,சிறுமியர் நமது புராண இதிகாசங்களைப் பற்றி அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். பெற்றோர்கள் அவர்களை நமது கோயில்களுக்கு அழைத்துச் சென்று பாரம்பரியத்தை விளக்க வேண்டும்.

பரத நாட்டியம் கற்றுக் கொள்ளும் போது, கர்நாடக இசையையும் சேர்த்துக் கற்றுக் கொள்வது நல்லது. பரதநாட்டியக் கலைஞருக்குத் தாளம், ராகம் பற்றிய ஞானம் அவசியம் தேவை. அதேபோல் தமிழ் நன்றாகத் தெரிய வேண்டும். தெலுங்கு, சமஸ்கிருதம் தெரிந்திருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பெற்றோர்கள், பெண்ணை நாட்டியப் பள்ளியில் சேர்த்து விட்ட பின் அக்கறையின்றி இருந்துவிடக்கூடாது. அவ்வப்போது வகுப்புகளுக்குச் சென்று, பெண்ணின் ஆர்வத்தையும் வளர்ச்சியையும் கவனித்து வர வேண்டும். அரங்கேற்றத்தை விரைவாக நடத்த வேண்டுமென்று குருவை நச்சரிக்கக்கூடாது. குறைந்தபட்சம் ஒன்றரைவருடம் கற்றுக் கொண்ட பின்னரே அரங்கேற்றம் செய்வது நல்லது. அரங்கேற்றம் என்பது, உங்கள் குழந்தை பரதநாட்டியத்தின் அடிப்படைகளைத் தெரிந்து கொண்டதற்கான ஒரு அங்கீகாரம்தான்; அப்புறம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறையவே இருக்கிறது. அந்த நிலைக்குள் புகுமுன் பரத நாட்டியத்தைத் தொடர்ந்து கற்றுக் கொள்ள சிறுமிக்கு ஆர்வம் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆர்வம் இல்லாத யாரையும் இந்தக் கலையில் ஈடுபடச் சொல்லி வற்புறுத்தக் கூடாது.

கற்றுக் கொள்பவருக்கு நிறைய பொறுமை வேணும். நேரம் ஒதுக்கணும். மணிக்கணிக்கில் பயிற்சி செய்யணும். பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும். நண்பர்களோடு அரட்டை அடிக்க நேரம் கிடைக்காது. பள்ளியில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது. சினிமா, தொலைக் காட்சி பார்க்க நேரம் கிடைப்பதும் சிரமமாகிவிடும். நான் கற்றுக் கொள்ளும் போது என் பாட்டி பாட வகுப்புகள் இல்லாதபோது மாலை மூன்று மணி அளவிலேயே, பள்ளிக்கு வந்து என்னைப் பரதநாட்டிய பயிற்சிக்கு அழைத்துப் போய்விடுவார். தோழிகளுடன் சேர்ந்து விளையாட முடியலேன்னு அழுகையாக வரும். ஆனால் அப்போது அப்படியெல்லாம் தியாகம் செய்ததால்தான் பின்னர்

ஓவியப் போட்டி

கண்கவர் வண்ணத்தில் அழகாகப் பறக்கும் பாராசூட்களைப் புத்தகங்களிலோ அல்லது டி.வியிலோ பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு 'பாராசூட்'. உங்கள் கற்பனைக்கேற்றபடி வண்ணம் தீட்டி அனுப்புங்கள்.

சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முழு முகவரியைத் தரவும்.

கடைசி தேதி: **2.12.2001**



இந்தக் கலையில் நன்கு கால் ஊன்ற முடிந்தது.

பரத நாட்டியம் என்பது அங்கங்கள் வெளிப்படுத்தும் பாவங்கள் மட்டும் கொண்டவை அல்ல. ஒரு கலைஞருக்கு நல்ல உடல் தகுதி தேவை. ரொம்பவும் குண்டாக இருக்காமல், அதேசமயம் ஒல்லியாகவும் இல்லாமல் மீடியமாக இருக்க வேண்டும். பரத நாட்டியப் பயிற்சியே ஒரு நல்ல உடற் பயிற்சி. அதிகமாக இனிப்பு, எண்ணெய் பல காரங்கள் சாப்பிடக்கூடாது. சரிவிகித உணவு சாப்பிட வேண்டும். புரோட்டீன் அதிகமுள்ள உணவுப் பொருட்களைச் சாப்பிட்டால் நல்ல சக்தி கிடைக்கும். களைப்பில்லாமல் ஆடலாம். பிரபல நாட்டியக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை நேரிலோ, வீடியோவிலோ அடிக்கடி பார்க்க வேண்டும்.

பரத நாட்டியத்தை முழு நேர தொழிலாக எடுத்துக் கொள்வதென்பது சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு, வசதிகளைப் பொறுத்தது. பதினான்கு வயதிலேயே எனக்கு மியூஸிக் அகாதமியில் ஆடுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதுபோல எல்லோருக்கும் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. எனவே ஒரு பரதநாட்டியக் கலைஞருக்குப் பின்பலமாக ஒரு கல்வித் தகுதி இருக்க வேண்டும். ஏனென்றால் முழு நேரக் கலைஞராகப் பிரகாசிக்க வாய்ப்பு இல்லாதபோது வேறு பணிகளுக்கும் முயற்சி செய்யலாமே!

பரத நாட்டியக் கலையில் ஈடுபாடு காட்டுவது கொஞ்சம் காஸ்ட்லியான சமாச்சாரம்தான். அரங்கேற்றத்தின்போது நிறைய செலவாகும். ஒரு தொழில்முறை நாட்டியக் கலைஞர் உடைகள் மற்றும் நகைகளைச் சொந்தமாகவே வைத்திருக்க வேண்டும். வாடகைக்கு அவ்வப்போது வாங்கிக் கொண்டிருந்தால் கட்டுப்படி ஆகாது. மரபுகளையும், அடிப்படைகளையும் கைவிட்டு விடாமல் நாட்டியத்தில் புதிய பரிணாமங்களை ஒரு கலைஞர் காட்ட முயற்சித்தால் வாய்ப்புகள் தொடர்ந்து கிடைக்கும்.

பரத நாட்டியம் என்பது மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தும் அற்புதமான கலை. அந்தக் கலையில் ஈடுபடுபவர்களுக்குப் பக்தி, ஒழுக்கம், நல்ல பண்புகள் ஆகியவை தானாக வரும். இந்தக் குணங்கள் ஒரு நல்ல இந்தியனை உருவாக்கும். கோகுலம் வாசகர்கள் நாட்டியக் கலைஞராகப் பிரகாசிக்க என் வாழ்த்துக்கள்!

சந்திப்பு: **ப்ரியன்**

கோகுலம் – ஈகிள் டயரி இணைந்து வழங்கும் போட்டி



நீங்கள் என்னவெல்லாம் எழுதுவீர்கள்? வீட்டுப் பாடம், பரீட்சை, கதை, கவிதை, கட்டுரை, கடிதம்... என்று எத்தனையோ விஷயங்களை எழுதுவீர்கள். ஆனால் எத்தனை பேர் டயரி எழுதுகிறீர்கள்? டயரி எழுதுவதும் ஒரு கலைதான். டயரியில் இதுதான் எழுத வேண்டும் என்பதில்லை. உங்கள் மனதுக்குப் பிடித்த, பிடிக்காத, உங்களைப் பாதித்த, நீங்கள் நினைத்து சந்தோஷப்பட்ட... என எந்த விஷயங்களையும் எழுதலாம். டயரி எழுதுவதன் மூலம் உங்களின் எழுத்தாற்றல் பெருகும். கற்பனை வளம் கூடும், கையெழுத்து நன்றாக வரும், மனச்சுமை குறையும்.

பெரிய பெரிய தலைவர்களும், விஞ்ஞானிகளும் பிற்காலத்தில் தங்கள் வாழ்க்கை வரலாறுகளையும் குறிப்பிட்ட காலக் கட்டத்தில் நடைபெற்ற சம்பவங்களையும் எழுதுவதற்கு டயரி எழுதும் பழக்கமே பெரிதும் உதவியிருக்கிறது. உங்களுடைய டயரிகள் எதிர்காலத்தில் உங்களுக்கு எவ்வாறெல்லாம் உதவும் என்பதை இன்று எப்படி கணிக்க முடியும்? டயரியில் என்னென்ன எழுதலாம்?

* அன்றாட நிகழ்ச்சிகளை அந்தந்த தேதியில் சுருக்கமாக எழுதலாம்.
* பள்ளியில் நடைபெற்ற சுவையான சம்பவங்களை எழுதலாம். ஆசிரியரிடம் திட்டு வாங்கி அதை மனதுக்குள் போட்டுக் கஷ்டப்படாமல் டயரியில் மனச்சுமையை இறக்கி வைக்கலாம்.
* செய்தித்தாள், டி.வி.களில் வரும் சுவாரசியமான வியங்களைப் பதிவு செய்து வைக்கலாம்.
* உங்கள் சகோதர, சகோதரிகள், நண்பர்களின் பிறந்த நாட்கள் மற்றும் முக்கிய நாட்களை மறந்து விடாமல் குறித்து வைக்கலாம்.
* கதை, கவிதை எழுதிப் பார்க்கலாம். உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளலாம்.
* பாக்கெட் மணிக்கு கணக்கு எழுதலாம்!

டயரி எழுதுவதன் அவசியம் உங்களுக்குப் புரிந்திருக்கும். நீங்கள் டயரி எழுதும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள உதவும் வகையில் – ஈகிள் பிரஸ் அதிபர் திரு. பிரதாப்சிங் தமது அன்புப் பரிசாக கோகுலம் வாசகர்களுக்கு 50 ஈகிள் டயரிகளை வழங்குகிறார். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

'டயரி எழுதுவது எப்படி?' என்ற தலைப்பில் உங்கள் கருத்துகளையும் அனுபவங்களையும் சுவையாக எழுதி கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை – 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். சிறப்பாக எழுதிய 50 பேருக்கு டயரி வழங்கப்படும். மிகச் சிறந்த படைப்புகள் கோகுலத்தில் பிரசுரமாகும். வாழ்த்துகள்!

அட்டையில் : **மதுப்ரியா**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

புதிர் உலகம்

I. மூன்று பால் கேன்கள் இருக்கின்றன. அவற்றின் கொள்ளளவு முறையே 10 லிட்டர், 5 லிட்டர், 3 லிட்டர்.

இவற்றில் 10 லிட்டர் கேன் காலி யாகவும், 5 லிட்டர் கேனில் 5 லிட்டர் பாலும், 3 லிட்டர் கேனில் 3 லிட்டர் பாலும் இருக்கின்றன.

கேன்களில் உள்ள பாலை எந்த கேனில் வேண்டுமானாலும் மாற்றலாம். 1 லிட்டர் பாலைத் தனியாக எடுக்க வேண்டும். எப்படி?

- ஞா. மாடசாமி, சென்னை.

II. குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் சம அளவில் சகோதர சகோதரிகள் உள்ளனர். ஆனால் ஒவ்வொரு ஆணுக்கும் சகோதரர்கள் போன்று மூன்று பங்கு சகோதரிகள் உள்ளனர். எனில் எத்தனை ஆண்கள்? எத்தனை பெண்கள்?

- பெ. நடராசன், 9ம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சித்தை, இராமநாதபுரம்.



III. ஐந்து பொருட்களின் மொத்த விலை 125 ரூபாய். இதில் முதல் பொருளின் விலையைவிட இரண்டாம் பொருளின் விலை மூன்று மடங்கு அதிகம். இரண்டாம் பொருளின் விலையில் இருந்து முதலாம் பொருளின் விலையைக் கழித்தால் மூன்றாம் பொருளின் விலை வரும். மூன்றாம் பொருளின் விலையில் பத்தைக் கழித்தால் நான்காம் பொருளின் விலை வரும். நான்காம் பொருளின் விலையில் ஐந்தைக் கழித்தால் ஐந்தாம் பொருளின் விலை வரும். இந்த ஐந்து பொருட்களின் தனித்தனி விலை என்ன?

IV. கீழ்க்காணும் குறிப்புகள் உணர்த்தும் வார்த்தைகள் என்னென்ன? இந்த வார்த்தைகள் அனைத்திற்கும் ஓர் ஒற்றுமை உண்டு.

அ) குழந்தை கண்மணி

ஆ) தாஜா பறவை

இ) பூவரசு நாயனம்

ஈ) பெரும் பணக்காரர் வழியனுப்புகிறார்.

- எம்.வினோத், விருத்தாச்சலம்

V. கீழே உள்ள கட்டங்களில் ஆறு பெயர்கள் ஒளிந்திருக்கின்றன. அவற்றிற்கான குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடையை எழுதுங்கள் பார்க்கலாம்.

1. 'தும்பா ராக்கெட் ஏவுதளம்' உள்ள இடம்.

2. மூன்று முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற பிரபல குத்துச்சண்டை வீரர்.

3. 'ஐரோப்பாவின் நோயாளி' என்று அழைக்கப்படும் நாடு எது?

4. சுவாசிக்காமல் உயிர் வாழும் ஒரே உயிரினம் எது?

5. இந்தியாவின் இரண்டாவது செயற்கைக் கோள் எது?

6. சுதந்திர இந்தியாவின் முதல் ராணுவத் தளபதி யார்?

- சா. சங்கீதா, 10ம் வகுப்பு, உமா மகளிர் உயர்நிலைப்பள்ளி, திருச்சிற்றம்பலம், மயிலாடுதுறை.

விடை 64ம் பக்கம்

மு	ஸ்	க	கி	ளா
பா	க	க்	க	ர
ய	ரு	ம	ரி	கே
து	பா	ப்	து	லி
ட்	ஸ்	ஈ	ரா	அ

முன்னொரு காலத்தில் வாரணாசியை ஒட்டிய கிராமம் ஒன்றில் அந்தணத் துறவி ஒருவர் இருந்தார். அவர் 'வைதர்ப்ப' மந்திர சக்தி பெற்றிருந்தார். குறிப்பிட்ட நட்சத்திரச் சேர்க்கை நேரத்தில் அதை ஜபித்தால், பொன்னையும் மணியையும் வானம் மழையாகப் பொழியும்!

ஒருசமயம், தனது முக்கியச் சீடர் ஒருவருடன், அந்தக் குருஜி, சேதி நாட்டுக்குக் கிளம்பினார். வழியில் ஒரு பெரிய காடு. அதில் ஐந்நூறு பேர் கொண்ட திருடர் கூட்டம் ஒன்று ஒளிந்து வாழ்ந்து வந்தது. அவர்கள் வழிப்பறியில் ஈடுபட்டனர்.

அவர்களிடம் ஒரு வழக்கம். இரண்டு வழிப்போக்கர்களைப் பிடிப்பார்கள். முக்கிய நபரைக் கட்டிப் போடுவார்கள். இன்னொருவரை அவர்கள் குறிப்பிடும் 'செல்வத்தோடு வந்து இவரை மீட்டுச் செல்' என்று விடுவித்து அனுப்புவார்கள்.

குருஜிக்கு இந்த விவரம் எதுவும் தெரியாது. சீடருடன் வந்து அத்திருடர்களிடம் மாட்டிக்கொண்டார். அவர்கள் குருஜியைக் கட்டிப் போட்டுவிட்டுச் சீடனிடம் ''ஆயிரம் பொன் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, இவரை அழைத்துச்செல்'' என்று விடுவித்து



பொன்மாரி!

அனுப்பினர்.

புறப்படும்முன், சீடர் குருஜியிடம் "குருவே! நான் ஓரிரு நாளில் பணத்துடன் வந்து விடுகிறேன்..." எனக் கூறிவிட்டு, ரகசியமாக, "இன்றிரவு பொன்மாரி பொழியும் சுபவேளை வருகிறது. திருடர் தரும் தொல்லைகள் தாங்காமல், அவர்களுக்கு எதிரில் செல்வ மழையை வரவழைத்து விடாதீர்கள். உங்களது மந்திர சக்தி பற்றித் திருடர்கள் தெரிந்து கொண்டு விட்டால், பற்பல ஆபத்துகள் வந்து சேர்ந்து விடும். கவனம்" என்று எச்சரித்துவிட்டுப் போனார்.



இரவு வந்தது. பொன்மாரி பொழியும் வேளையும் நெருங்கியது. நேரம் ஆக ஆகக் குருஜியின் எண்ண ஓட்டம் விபரீதமாயிற்று. 'கையில் வெண்ணெய் இருக்க, யாராவது நெய்க்கு ஏங்குவார்களா? சீடன் பணத்துடன் வரும் வரையில், நாம் ஏன் இப்படி கட்டுண்டு கிடக்க வேண்டும்? பொன்மாரி பொழியச் செய்து அதைக் கொடுத்துவிட்டு இத்துன்பத்திலிருந்து விடுதலையாகி விட்டால் என்ன? அதுதான் சரி...' என்று தீர்மானித்தார்.


உடனே, திருடர்களை அழைத்தார் - "என் கட்டுகளை அவிழ்த்து விடுங்கள். என்னை நீரோடைக்கு அழைத்துப் போங்கள்... நீராடிப் புத்தாடை, மாலை சூடி, நான் ஒரு முக்கிய ஜபம் செய்ய வேண்டும்..." என்றார்.

முதலில் திருடர்கள் அவரது கட்டுகளை அவிழ்க்கத் தயங்கினர். பிறகு, 'இத்தனை பேர் இருக்கும்போது, எப்படி அவரால் ஓட முடியும்?' எனக் கருதி குருஜி கேட்ட வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தனர்.

குருஜி, 'வைதர்ப்ப' மந்திரத்தை ஜபித்து விட்டு வானத்தைப் பார்த்தார். உடனே, பொன்னும் மணியும் மழையாகப் பொழிந்தன. ஐந்நூறு திருடர்களும் அவற்றை வாரி மூட்டை கட்டிக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். குருஜியும் அவர்கள் பின்னாலேயே ஓடினார்.

அதே காட்டின் வேறொரு பகுதியில் இன்னொரு திருடர் கூட்டம் ஒளிந்திருந்தது. அதிலும் ஐந்நூறு பேர் இருந்தனர். பொன் மூட்டையுடன் ஓடிய இந்தக் கூட்டம் அவர்களிடம் மாட்டிக்கொண்டு விட்டது.

ஜானகி மணாளன்



ஆசிரியர் : ஆப்கானிஸ்தான் எந்தக் கண்டத்தில் உள்ளது?

***மாணவன்** : அமெரிக்கா குண்டு வீசும் அபாய கண்டத்தில் **உள்ளது** சார்!*

- த. சிவபாரதி, கோபி, ஈரோடு.

உடனே இந்தக் கூட்டத் திருடர்கள் அவர்களிடம், ''உங்களுக்குப் பொன்னும் மணியும்தானே வேண்டும்? இதோ, எங்களைப் பின் தொடர்ந்து ஒரு குருஜி வருகிறார் பாருங்கள். அவரை மடக்குங்கள். நிறையச் செல்வம் கிடைக்கும். எங்களுக்கு அவர்தான் 'பொன்மாரி' வரவழைத்துக் கொடுத்தார்'' எனக் கூறிவிட்டு, அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

பின்னால் வந்த குருஜி, அந்த இரண்டாவது திருடர் கூட்டத்தினரிடம் மாட்டிக் கொண்டு விட்டார். அவர்களிடம் குருஜி உண்மையைக் கூறினார். ''பொன்மாரி பொழியும் சுப நேரம் முடிந்துவிட்டது. மறுபடியும் அவ்வேளை வர இன்னும் ஓராண்டு ஆகும். அதுவரையில் காத்திருங்கள்...'' எனக் கெஞ்சினார்.

குருஜி கூறியதைத் திருடர்கள் ஏற்கவில்லை. ''மூடனே! எங்களை நீ ஏமாற்றப் பார்க்கிறாயா? தொலைந்து போ...'' என்று அப்போதே வெட்டிச் சாய்த்தனர். சீடர் சொன்னதைக் கேட்காததால், குருஜி உயிர் விட வேண்டியதாயிற்று.

அதன் பிறகு அத்திருடர்கள், முதல் திருடர் கூட்டத்தைத் துரத்திப் பிடித்துப் பொன் மூட்டையைக் கைப்பற்ற எண்ணினர். அவர்களைத் துரத்திச் சென்றனர்.

ஓரிடத்தில் இரண்டு திருடர் கூட்டத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு இறந்து விழுந்தனர். கடைசியில், கூட்டத்துக்கு ஒருவர் வீதம் இரண்டே பேர்தான் மிஞ்சினர்.

அவ்விருவரும், இனியும் சண்டையிடுவது வீண் என்பதை உணர்ந்தனர். ஒருவரை ஒருவர் ரகசியச் சூழ்ச்சியால் வெல்லத் திட்டமிட்டனர்.

இருவரும், போரிடுவதை நிறுத்திவிட்டுக் கீழே சிதறிக் கிடந்த பொன்னையும், மணியையும் சேர்ந்து சேகரித்து ஒரே மூட்டையாகக் கட்டினர்.

பிறகு, மூட்டையைச் சுமந்து சென்று, ஒரு கிராமத்தை ஒட்டியிருந்த காட்டுப் பகுதியில், ஓரிடத்தில் மூட்டையை ஒளித்து வைத்தனர்.

ஒருவன் கத்தியுடன் நின்று அதைக் காவல் காத்தான். இன்னொருவன், இருவருக்கும் சாப்பிட உணவு தேடி வருவதற்காகக் கிராமத்துக்குள் போனான்.

என்றாலும், இருவர் மனத்திலும், தனித் தனி ரகசியச் சதித் திட்டம் உருவாயிற்று. உணவு தேடப் போனவன் திரும்பி வந்ததும், ஒரே வீச்சில் அவனை வெட்டிச் சாய்த்து விட்டுச் செல்வம் முழுவதையும் தானே அபகரித்துக் கொள்ளச் சதித் திட்டமிட்டான், காவலுக்கு நின்றவன்.

அதேபோல், உணவு தேடப் போனவனும், தனது சதித் திட்டத்தின்படி கிராமத்தில் கிடைத்த உணவில் சரி பாதியைத்தான் உண்டான். மற்றொரு பாதியில் கடுமையான விஷத்தைக் கலந்து எடுத்து வந்தான். அதைக் கொடுத்துக் காவலுக்கு இருப்பவனைக் கொல்ல இந்தச் சதி!

உணவுடன் வந்த அவனைக் காவலுக்கு நின்றவன் இதுதான் தக்க சமயம் எனக் கருதி, ஒரே வீச்சாக வாளால் வெட்டிக் கொன்றான். அதன் பிறகு, பணமூட்டையைத் தானே முழுவதுமாகத் தூக்கிக் கொண்டு கிளம்பினான்.

அப்போது, கீழே இறந்து கிடந்தவன் அருகில் சோற்று மூட்டை கிடப்பது அவன் கண்ணில் பட்டது! 'இது நமக்காக வந்ததுதானே? பசியாற அதைப் புசித்து விட்டு, அதன் பிறகு கிளம்பிப் போவோம்' என்று நினைத்தான். விஷம் கலந்திருந்த அந்தச் சாதத்தை எடுத்து உண்டு, அக்கணமே கீழே செத்து விழுந்தான்.

அடுத்த ஓரிரு நாட்களில்,

பணத்துடன் சீடர் திரும்பி வந்தார். குருஜியைப் பழைய இடத்தில் காணவில்லை. எங்கும் அலைந்து தேடினார். பயனில்லை.

ஓரிடத்தில், அவருடைய உடல் கிடப்பதைக் கண்டார். விவரம் புரிந்து விட்டது. மிகுந்த வேதனையோடு மரக் கட்டைகளைக் கொண்டு வந்து குருஜியின் உடலை எரித்து ஈமக்கடன்களைச் செய்து முடித்தார்.

"திருடர் தரும் தொல்லைகள் தாங்காமல், அவர்களுக்கு எதிரில் செல்வ மழையை வரவழைத்து விடாதீர்கள். உங்களது மந்திர சக்தி பற்றித் திருடர்கள் தெரிந்துகொண்டு விட்டால், பற்பல ஆபத்துகள் வந்து சேர்ந்துவிடும்."

பிறகு, அங்கிருந்து காட்டுக்குள் சென்ற போது ஓரிடத்தில், எங்கு பார்த்தாலும், பிணங்களாகக் கிடப்பதைக் கண்டார். இரண்டு திருடர் கூட்டங்களின் ஆயிரம் பேரும் தமக்குள் வெட்டிக் கொண்டு செத்துக் கிடப்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. பிணங்களை எண்ணிப் பார்த்தார். 998 வந்தது.

மீதி இருவர் என்ன ஆகியிருப்பார்கள்? அவ்விருவரும் தான் பொன்மாரிச் செல்வத்தை முழுவதுமாக எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். அவர்களைத் தேடிக் காட்டுக்குள் போனார்.

கடைசியில் ஓரிடத்தில் ஒருவர் வெட்டப்பட்டு இறந்து கிடப்பது தெரிந்தது. அப்படியானால், எஞ்சிய கடைசித் திருடன் என்ன ஆனான்? அவன்தான் மொத்தச் செல்வத்தையும் அள்ளிக் கொண்டு போயிருக்க வேண்டும் என்று நினைத்தார்.

ஆனால், கொஞ்ச தூரத்தில், பெரிய பொன்மூட்டை கிடப்பதும், அருகிலேயே ஒருவன் விஷச் சோற்றைத் தின்றதால் இறந்து கிடப்பதும் தெரிந்தது. அவர் மனம் மிகுந்த வேதனை அடைந்தது.

தகுந்த காரணம் இன்றித் தேவையில்லாத இடத்தில், தகுதியற்றவர்கள் மத்தியில், அவசியமற்ற வகையில் அந்தக் குருஜி வைதர்ப்ப மந்திரத்தை ஜபித்தது தப்பு!

அவர் செய்த அந்தத் தப்பு, அவரையே அழித்துவிட்டதோடு, மேலும் ஆயிரம் பேரின் அழிவுக்கும் காரணமாகிவிட்டது.

தவறான வழியில் செல்வம் சேர்ப்பது தப்பான செயல். அந்தச் செல்வம், கடைசியில் தன்னைச் சேர்த்தவரை விட்டுப் போவதோடு, அவரையும் அழித்து விட்டுப் போய் விடும். தப்பு செய்தால் தண்டனை உண்டு!

பிற்பாடு அந்தச் சீடர், காட்டில் கிடந்த செல்வம் முழுவதையும் எடுத்து வரச் செய்து, மக்கள் துயர் துடைக்கும் பல நற்பணிகளில் அது செலவிடப்பட வழி வகுத்தார்.

அந்தச் சீடர்தான் 'போதி சத்துவர்!'

கைக்கடிகாரங்கள் யாருக்கு?

அக்டோபர் போட்டியில் ஆர்வத்துடன் நிறைய பேர் கலந்து கொண்டனர். சரியான விடைகளை எழுதியவர்களில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை :

1. மாமரம், 2. புளியமரம், 3. வாழை மரம், 4. அரசமரம், 5. வேப்பமரம் 6. தென்னைமரம்.

பரிசு பெற்றவர்கள் :


1. சு. ராஜலக்ஷ்மி, 8ம் வகுப்பு, லிட்டில் ஃபிளவர் பள்ளி, திருநெல்வேலி டவுன்.

2. ஆர். செல்வரத்தினம், 10ம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, புறங்காடு, புதுக்கோட்டை மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

எடுத்துக்காட்டு!

எங்கள் வகுப்பில் தமிழாசிரியர் இலக்கண வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். அவர் மிகவும் நகைச்சுவை உணர்வு உடையவர். அடிக்கடி எங்களிடம் கேள்விகள் கேட்பார். ஒரு நாள் ஸ்ரீனிவாசன் என்பவனிடம் உவமை அணி பற்றி விளக்குமாறு கூறினார். அவனும் பதில் கூறிவிட்டு உட்கார்ந்து விட்டான். அதைக் கவனித்த ஆசிரியர், ''என்ன உட்கார்ந்து விட்டாய்? எங்கே எடுத்துக் காட்டு?'' என்று கேட்டார். உடனே அவன், உவமை அணியைப் பற்றி புத்தகத்தில் இருந்த பகுதியை அவரிடம் எடுத்துக் காட்டினான். உடனே ஆசிரியர், "புத்தகத்தை எடுத்துக் காட்டவா சொன்னேன்? உன் பதிலுக்கு எடுத்துக்காட்டாகிய உதாரணத்தைக் கேட்டேன்" என்றார். வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது. பிறகு அவன் மன்னிப்புக் கேட்டுவிட்டு உதாரணத்துடன் விளக்கினான்.




- எம். வினோத், விருதாச்சலம்

நாக்கு எங்கே?

என்ன தலைப்பு?


இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிக்காக வகுப்பு வாரியாகக் கதை, கவிதை, கட்டுரை என பலவும் தயாரித்து வகுப்பு ஆசிரியரிடம் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தோம். அந்த வகையில் கட்டுரை ஒன்றை எழுதிய ஒரு மாணவன் எங்கள் வகுப்பாசிரியரிடம் "கட்டுரைக்கு என்ன தலைப்பு வைக்கலாம்?'' என்று கேட்டான். அப்போது எங்கள் வகுப்பின் மற்றொரு மாணவன் எழுந்து "தண்ணீரோடு சேர்ந்த பாலும் சுவைக்கும்னு தலைப்பு வை'' என்றான். வகுப்பில் ஒரே சிரிப்பு வெள்ளம்தான். காரணம், அந்தக் கட்டுரை எழுதிய மாணவனின் அப்பா ஒரு பால் வியாபாரி. உடனே ஆசிரியர், "பாலில் சர்க்கரை போட்டுத்தானே இனிப்பாகக் குடிப்பார்கள். எனவே நீ இப்படி அவனைக் கசப்பாக்கும் விதத்தில் கேலி பேசாதே" என்று கூறி கிண்டல் செய்த மாணவனை உட்கார வைத்தார்.



- ராமகிருஷ்ணன், காயக்காடு.

இனியவை...

தமிழாசிரியர் முதல் நாள் நடத்திய பாடத்திலிருந்து கேள்வி கேட்டார். ஒரு மாணவனிடம் " இனியவை 40 கூறு" என்றார். வேகமாக எழுந்தவன் "லட்டு, பூந்தி,



ஜாங்கிரி, அல்வா, கேசரி...'' என்று கடகடவென்று ஒப்பித்தான். ஆசிரியர் திடுக்கிட்டு, ''நிறுத்து; என்ன பதில் சொல்றே?'' என்றார். "சார், நீங்கதானே இனியவை 40 கூறுன்னு சொன்னீங்க?

அதான் 40 இனிப்புப் பண்டங்களைச் சொல்ல ஆரம்பிச்சேன்'' என்றான் அவன். ''எப்போதும் சாப்பாட்டு நினைவாவே இரு. நேற்று பாடம் நடத்தும்போது என்ன பண்ணிட்டிருந்தே?'' என்றார் கோபத்துடன் ஆசிரியர். ''சார், ரெண்டு நாளா நான் பள்ளிக்கூடம் வரலை.'' என்றவுடன் அவனை மன்னித்து விட்டு விட்டார் ஆசிரியர்.

- எம்.எஸ். கலா, பன்னிரண்டாம் வகுப்பு, குத்தாலம்.

வைரஸ்!

எங்கள் பள்ளியில் புதிதாக கம்ப்யூட்டர் வகுப்பு ஆரம்பித்திருந்த நேரம். ஒரு வாரத்தில் வைரஸ் பிரச்னை வந்து விட்டது. எனவே ஆசிரியர் ஒரு மாண



வியை அழைத்து ''இன்னிக்கு கம்ப்யூட்டர் வகுப்பு கிடையாது. வைரஸ் வந்துவிட்டது. சரியான பிறகுதான் வகுப்பு நடக்கும். எனவே வகுப்பில் அமர்ந்து படியுங்கள்'' என்று கூறியிருக்கிறார். அவள் வகுப்புக்கு வந்து ''கம்ப்யூட்டருக்கு வைரஸ் வந்துடுச்சாம். எவ்வளவு சுத்தமாக கம்ப்யூட்டர் அறையை வச்சிருந்தாலும் எப்படித்தான் வருகிறதோ? அதனால இன்னிக்கு வகுப்பிலேயே உடகார்ந்து படிக்கச் சொன்னார் ஆசிரியர்'' என்றதும் எங்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. பிறகு அவளுக்கு மெதுவாகப் புரிய வைத்தோம்.

- இ. ஐஸ்வர்யா, தூத்துக்குடி

எங்கே?

ஆறாம் வகுப்பு படித்தபோது தமிழாசிரியர் குறள் மனப்பாடம் செய்து எழுதச் சொன்னார். அனைவருடைய பேப்பரையும் திருத்திக் கொண்டிருந்த ஆசிரியர் ஒரு மாணவனைக் கூப்பிட்டு ''தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே - சுட்ட வடுன்னு எழுதியிருக்கியே 'நாக்கை' என்ன பண்ணினே?'' என்று கேட்டார். அவன் 'திரு திரு'வென முழித்த படியே ''நாக்கை வாய்க்குள் தான் சார்




வைத்திருந்தேன்!'' என்றான் அப்பாவியாக. ஆசிரியர் அவனை அருகே அழைத்து ''குறளில் வரும் 'நாவினால்' என்ற வார்த்தை எங்கே என்று கேட்டேன்'' என்று விளக்கினார்.


- ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

எதனால்?

தமிழ் ஆசிரியர் சிலப்பதிகாரம் நடத்திக் கொண்டிருந்தார். ''பாண்டிய மன்னன் 'கொண்டு வா' என்று சொல்வதற்குப் பதில் 'கொன்று வா' என்று சொல்கிறான். இது எதனால் என்று தெரியுமா?'' என்று கேட்டார். அவசரமாக எழுந்த ஒரு மாணவன் ''மன்னருக்கு tongue slip ஆகி விட்டது என்று தெரிகிறது'' என்று சொன்னான். எல்லோரும் சிரித்து விட்டோம்!

- சிந்துஜா, 10ம் வகுப்பு, பொறையார், நாகை மாவட்டம்.





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

வீட்டுத் தோட்டம்

வீட்டிற் குரிய காய்கறி
வேண்டும் போது வந்திட
தோட்டம் ஒன்று சின்னதாய்
சுலப மாகப் போடலாம்.

வீட்டைச் சுற்றி இருக்கிற
மிச்ச மான இடத்திலே
நாட்ட மோடு விதைசில
நட்டு வைத்தல் போதுமாம்.

ஒன்றி ரண்டு அவரையை
ஊன்றி வைத்துப் போற்றினால்
நன்கு காய்க்கத் தொடங்கவே
நாளும் பறித்துக் கொள்ளலாம்.

மல்லி கீரை கத்தரி
வளர்ப்பதாலே புதியதாய்
நல்ல நல்ல காய்கறி
நாளும் வீட்டில் காணலாம்.

தேவைக் கதிகம் காய்கறி
சேரும்போது அன்புடன்
தேவைக் கேற்ப உறவினர்
தின்ப தற்குக் கொடுக்கலாம்!

அழகனார்



அறிஞர்கள் வாழ்வில்...

ஆயிரம் வேண்டாம்

ஒரு சமயம் சிரிப்பு நடிகர் சார்லி சாப்ளினும் அவர் நண்பர் ஒருவரும் இரயிலில் ஒன்றாகப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது வழியில் ஒரு அழகான மலை தென்பட்டது. "ஆஹா.. இந்த இயற்கையின் அழகை ரசிக்க ஆயிரம் பவுன்ட் வேண்டுமானாலும் கொடுக்கலாம்..!" என்று நண்பர் புகழ்ந்தார்.

இதைக் கேட்ட சார்லிசாப்ளின் ரயிலில் இருந்த அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார். ரயில் உடனே நின்றது. "இப்போது அழகை நன்றாக அனுபவியுங்கள். நீங்கள் இதற்கு ஆயிரம் பவுன்ட் கொடுக்க வேண்டாம். அசாதாரணமாக அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து ரயிலை நிறுத்தியதற்காக ஐந்து பவுன்ட் கொடுத்தாலே போதும்" என்றார். நண்பரோ திகைத்த நின்றார்.



• கோபாலகிருஷ்ண கோகலே



• சார்லி சாப்ளின்

மணி என்ன...?

தமிழ்ப் பெரியார் திரு.வி.க. கண் பார்வை மங்கி படுக்கையில் இருந்தபோது, மணி பார்க்க விரும்பினார். அருகில் இருந்த ஒருவரிடம் "கால அளவினைக் கடிதில் நோக்குக..." என்றார்.

அவர் கடிகாரத்தைப் பார்த்து "அஞ்சு முகனோடு ஆறு முகனும் அவன் குஞ்சு மணியினோடு குகனும்" என்றார்.

அஞ்சுமுகன் - 5, ஆறுமுகன் - 6, குஞ்சுமணி - 1/2, குகன் - 1/4, ஆக, மணி 11 3/4.

- டி.எஸ்.பாலு, சென்னை

விரும்பமாட்டார்!

இங்கிலாந்தின் அரசராக இருந்த எட்டாவது எட்வர்ட் என்பவர் தன்னுடைய பாட்டியான, புகழ் பெற்ற விக்டோரியா மகாராணியின் குணங்களை நன்கு அறிந்தவர்.

ஒரு நாள் அவரது ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது "சொர்க்கத்தில் எல்லா மனிதர்களும் ஒன்றாகக் கருதப்படுவார்கள்" என்றார். "எல்லோரும் ஒன்றாகவா? என்னுடைய பாட்டி விக்டோரியா மகாராணியைக் கூடவா எல்லோருடனும் ஒன்றாகக் கருதுவார்கள்?" என்று சந்தேகமாகக் கேட்டார் எட்வர்ட்.

"ஆமாம்! விக்டோரியா மகாராணியையும் மற்றவர்கள் போலவே கருதுவார்கள்" என்று ஆசிரியர் கூறினார்.

"அப்படியானால், என்னுடைய பாட்டிக்கு அது கொஞ்சங்கூடப் பிடிக்காது. அவர் அங்கே போக மாட்டார்" என்று பதில் கூறினார் அரசர்.



• திரு.வி.க.

உண்மைக்குப் பரிசு!

மகாத்மா காந்திஜியின் அரசியல் குரு என்று போற்றப்பட்ட கோபாலகிருஷ்ண கோகலே சிறு வயதில் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் ஆசிரியர் சில கணக்குகளை மாணவர்களுக்கு வீட்டுப் பாடமாகக் கொடுத்தார். கோகலே அந்தக் கணக்குகளில் ஒரு கணக்கைத் தவிர மற்ற எல்லா

கணக்குகளையும் சரியாகப் போட்டுவிட்டான். அந்த ஒரு கணக்கை மட்டும் அவனுக்குப் போடத் தெரியாததால், தன் நண்பனின் உதவியை நாடினான். நண்பனின் உதவியைக் கொண்டு அந்த கணக்கைப் போட்டு முடித்தான்.

மறுநாள் வகுப்பில் ஆசிரியர் எல்லோருடைய வீட்டுப் பாடத்தையும் வாங்கி சரி பார்த்தார். கோகலே மட்டுமே எல்லாக் கணக்குகளையும் சரியாகப் போட்டிருப்பதைக் கண்டார். கோகலேயைப் பாராட்டி, தனது பேனாவை அவனுக்குப் பரிசாகக் கொடுப்பதாக அறிவித்து, அருகில் அழைத்தார்.

கோகலே ஆசிரியரின் அருகில் சென்றதும் அவனது கண்கள் கலங்கின. அவன் அழத் தொடங்கிவிட்டான். அவனது அழுகைக்குக் காரணம் தெரியாத ஆசிரியர் அவனிடம், ''கணக்குகளைச் சரியாகச் செய்த நீ ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டார்.

''ஐயா, நான் உங்களை ஏமாற்றிவிட்டேன். ஒரு கணக்கை என் நண்பனைக் கேட்டுப் போட்டேன். அதனால் இந்தப் பரிசுக்கு நான் அருகதை அற்றவன்'' என்று அழுது கொண்டே கூறினான். அவனுடைய உண்மை பேசும் பண்பைக் கண்டு ஆசிரியர் மகிழ்ந்தார். ''இந்தப் பேனா உனக்குத்தான். இது நீ உண்மை பேசியதற்காக'' என்று கூறி, அந்தப் பேனாவை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

மரணத்தில் விளங்கிய உண்மை

அலெக்சாண்டர் உலகின் பெரும்பகுதியை வென்ற மாவீரர். அவர் இறந்த பிறகு அவருடைய உடலைச் சவப் பெட்டியில் வைத்து அவருடைய நண்பர்களும் தளபதிகளும் தூக்கிச் சென்றனர். அப்போது அவருடைய இரண்டு கைகளும் சவப் பெட்டிக்கு வெளியே இரண்டு பக்கமும் நீட்டிக் கொண்டிருந்தன. எல்லோரையும் இது வியக்க வைத்தது. அதாவது அலெக்சாண்டர் இறக்கும் தருவாயில் தெரிவித்திருந்த அவருடைய விருப்பத்தின்படிதான் இப்போது அவருடைய இரண்டு கைகளும் சவப் பெட்டிக்கு வெளியே அப்படி நீட்டி வைக்கப்பட்டிருந்தனவாம்.

''மாவீரர் அலெக்சாண்டர் உலகின் எத்தனையோ நாடுகளை வென்று ஆதிக்கம் செலுத்திய போதிலும், அவர் இறந்த பிறகு அவர் எதையுமே எடுத்துச் செல்லவில்லை. வெறுங்கைகளோடுதான் போகிறார் என்பதை உலகம் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நான் இறந்த பிறகு என்னுடைய இரண்டு கைகளையும் சவப் பெட்டிக்கு வெளியே எல்லோரும் பார்க்கும்படி நீட்டி வையுங்கள்'' என்று அலெக்சாண்டர் இறக்கும் தருவாயில் கேட்டுக் கொண்டாராம்.

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி

அறிவு தாடியில் இல்லை!

அறிவு

ஒரு சமயம் ஸ்பெயின் நாட்டிலிருந்து ஓர் இளைஞர் பக்கத்து நாட்டுக்குத் தூதுவராக நியமனம் செய்யப்பட்டார். அந்த நாட்டு அரசர், இளைஞரைப் பார்த்துக் கிண்டலாகச் சொன்னார்! ''ஸ்பெயின் நாட்டில் மனிதர்களே இல்லை போலிருக்கிறது! அதனால்தான் ஸ்பானிய மன்னர் தாடி முளைக்காத ஒரு சிறுவனைத் தூதுவராக அனுப்பியிருக்கிறார்'' என்று.

உடனே தூதுவராக வந்த இளைஞர் சொன்னார் : ''அரசே! அறிவு என்பது தாடியில் இருப்பதாகத் தாங்கள் கருதுவது எங்கள் மன்னருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், எனக்குப் பதிலாக ஒரு வெள்ளாட்டையே அனுப்பி வைத்திருப்பார்'' என்று ஒரு போடு போட்டார். மன்னர் ஆச்சரியத்தில் வாய் பேசாது நின்றுவிட்டார்.

- நெ. இராமன், சென்னை



ஒரு ஏழைத் தாய் நாலு வீட்டில் வேலை செய்து தன் இரு பிள்ளைகளையும் வளர்த்தாள். அவளுடைய தூரத்து உறவினர் ஒருவர் அவளைப் பார்க்க வந்தார்.

அவர், ''அம்மணி! வரும்படி இல்லாத குடும்பம். உன் மூத்த பையன் ராமபத்ரனை என்னுடன் அனுப்பி வை. காஞ்சீபுரத்தில் ஒரு செல்வந்தரிடம் வேலைக்குச் சேர்த்து விடுகிறேன். அவனாவது வயிறாரச் சாப்பிடுவான். உனக்கும் பாரம் குறையும்'' என்றார். தாய் ஒப்புக் கொண்டாள்.

ராமபத்ரன் ரொம்பவும் நல்ல பையன். குடும்பக் கஷ்டம் தெரிந்தவன். பொறுப்பாக நடந்து கொள்வான். தாய் மகனுக்கு ஏராளமாகப் புத்திமதிகள் சொல்லி அனுப்பினாள்.

செல்வந்தர், ''அட, நீங்க சொல்கிறதெல்லாம் சரிதான். இந்தப் பையன்கள் வேலை கத்துக்கிட்டதும் அடுத்த இடத்திலே சம்பளம் கொஞ்சம் அதிகமாத் தருகிறதா ஆசை காட்டினால் போதும். ஓடிடறாங்க. அதனாலே ஒரு ஒப்பந்தம் செய்துக்கணும். அது ஒப்புக்குத் தான்! நானா இவனை வேலையை விட்டு அனுப்பினா என் வலது கையை வெட்டிக்கிறேன். இவனா வேலையை விட்டு நின்னா இவனது இடது காலை வெட்டிக் கொண்டால் போதும். சம்மதமா, எழுதலாமா?'' என்றார்.

உறவினர் திகைப்புடன், ''நிபந்தனை பயங்கரமாயிருக்கிறதே! அப்படியென்ன வேலை? எவ்வளவு சம்பளம்?'' என்று கேட்டார்.

''நான் விறகுமண்டி வைத்திருக்கிறேன். தினமும் ஒரு கட்டு விறகு கொண்டு வர வேண்டும். தினமும் ஒரு வேளை இலை நிறையச் சாப்பாடு போடுவேன்'' என்றார்.

''மதியம், ராத்திரியெல்லாம் பசிக்காதா?'' என்று உறவினர் கேட்க, ''வேறு வேலை செய்து சாப்பிட்டுக் கொள்ளலாம்'' என்றார் செல்வந்தர்.

''வேண்டாம் ராமபத்ரா, வா'' என்று உறவினர் எழுந்திருக்க, ராமபத்ரன், ''வேண்டாம், மாமா! ஊரிலே சில நாள் ஒருவேளை கூட சாப்பாடு கிடைக்காது. அதுக்கு இது தேவலை. அம்மாவுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடாது'' என்று தடுத்தான்.

ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு இருவரும் கையெழுத்திட்டனர். உறவினரும் சாட்சிக் கையெழுத்துப் போட்டார்.

செல்வந்தர் மகா கஞ்சன். அதோடு இரக்கக் குணமே இல்லாதவர். மறுநாள் காலை ராமபத்ரன் எழுந்து ஒரு கயிறு வாங்கிக் கொண்டு காட்டிற்குப் போனான். அங்குமிங்கும் அலைந்து விறகு சேகரித்

மாலதி

கையா, காலா?



தான். செல்வந்தரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்று பெரிய கட்டாகக் கட்டித் தூக்க மாட்டாமல் தூக்கிச் சென்றான்.

'தொப்'பென்று விறகுக் கட்டைப் போட்டு விட்டு, "பசிக்கிறது. சாப்பாடு போடுங்கள்" என்றான்.

"கை கால் கழுவிக் கொண்டு வா" என்ற செல்வந்தர் உள்ளே திரும்பி, "ராமபத்ரனுக்குச் சாப்பாடு போடு" என்று குரல் கொடுத்தார்.

'வயிறுமுட்ட சாப்பிட்டால் ராத்திரி ஏன் பசிக்கப் போகிறது? நல்லாத் தூக்கம் வரும்' என்று நினைத்தபடி நாக்கைச் சப்புக் கொட்டியபடி உட்கார்ந்திருந்தான் ராமபத்ரன்.

செல்வந்தரின் மனைவி சோறு, குழம்பு, பொரியல் எல்லாம் எடுத்து வந்தாள். ஆல இலையில் ஒரு கரண்டி சாதம் வைத்தவுடனே நிரம்பி வழிந்தது. ஒரு கரண்டி குழம்பைச் சாதத்தின் மேல் ஊற்றிக் கொஞ்சம் பொரியலை அதன் மேல் தூவி விட்டு உள்ளே போய் விட்டாள்.

பிரமித்திருந்த ராமபத்ரன் ஆத்திரத்தோடு எழுந்தான். எஜமானர் முன் போய், "இதென்ன அக்கிரமம்! ஆல இலையிலா சாப்பாடு போடுவீர்கள்? இதுவா ஒரு இலை சோறு?" என்று கேட்டான்.

"என்ன இலை என்று எழுதிக் கொண்டோமா? எனக்கு ஆல இலையில் சாப்பாடு போடத்தான் கட்டும்" என்றார் செல்வந்தர்.

"நான் ஊருக்குப் போகிறேன். உங்கள் வேலை எனக்கு வேண்டாம்" என்று பையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான் ராமபத்ரன்.

"தாராளமாகப் போ. அடே, யாரங்கே! அரிவாளை எடுத்துக் கொண்டு வா. ஒப்பந்தப்படி இவனுடைய இடதுகாலை வெட்டலாம்" என்று குரல் கொடுத்தார். ராமபத்ரன் விக்கித்து நின்றான்.

நொண்டியாக வாழ்வதாவது! மௌனமாக வந்து ஆல இலை உணவைச் சாப்பிட்டான். இப்படியே தினமும் நடந்தது.

ராமபத்ரன் நாளுக்கு நாள் இளைத்

தான். எஞ்சிய நேரத்தில் ஒரு பலகாரக் கடையில் வேலை செய்து உயிர் வாழ்ந்தான். ஒரு வருடமாயிற்று.

ராமபத்ரனின் தாய் தன் இளைய மகன் ராமச்சந்திரனிடம் போய், "உன் அண்ணனைப் பார்த்து வா" என்று பலகாரம் செய்து கொடுத்தாள். ராமச்சந்திரன் தமையன் வேலை செய்யும் வீட்டுக்கு வந்தான்.

"உன் அண்ணன் காட்டுக்கு விறகு கொண்டு வரப் போயிருக்கிறான்" என்றாள் செல்வந்தர் மனைவி.

வழி விசாரித்துக் கொண்டு காட்டிற்கே போனான். எலும்பும் தோலுமாயிருந்த சகோதரனைக் கண்டு வேதனைப்பட்டான். காரணம் விசாரித்தான். நடந்ததெல்லாம் கூறினான் ராமபத்ரன்.

"தினமும் ஒரு கட்டு விறகு கொண்டு வர வேண்டும். தினமும் ஒரு வேளை இலை நிறையச் சாப்பாடு போடுவேன்."

"அண்ணா! இந்தப் பொல்லாத எஜமானருக்கு நான் பாடம் கற்பிக்கிறேன். நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்! பேசாமல் ஊருக்குப் போங்கள். அம்மாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம். பயப்படுவார்கள்" என்று ராமபத்ரனைச் சமாதானப்படுத்தினான்.

பிறகு இருவருமாக வீடு வந்து சேர்ந்தார்கள். ராமபத்ரன் ஆல இலை சோற்றை உண்டான். ராமச்சந்திரன் செல்வந்தரிடம், "ஐயா! அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அண்ணனைப் பார்க்க பிரியப்படுகிறார்" என்றான்.

"தம்பி! இந்த வேலையில் விடுப்பே கிடையாதே" என்றார் செல்வந்தர்.

"தெரியும். அண்ணன் சொன்னான். அண்ணன் வரும் வரை நான் வேலை செய்கிறேன்" என்றான். செல்வந்தர் தம்பியை ஏற இறங்கப் பார்த்தார்.

'இவன் புஷ்டியாக இருக்கிறான். வரவர ராமபத்ரனால் பெரிய கட்டாக விறகு கொண்டு வர முடியவில்லை! ராமபத்ரனுக்குப் பதிலாக இவனை நிரந்தரமாக்கிக் கொண்டால் என்ன' என்று யோசித்தார்.

"ரொம்பச் சந்தோஷம். ஆனால் ஒரு நிபந்தனை. ராமபத்ரன் அசமஞ்சன். நிரந்தரமாக நீயே இந்த வேலையைச் செய்வதானால் உன் தமையனை விடுவிக்கிறேன்" என்றார்.

ராமச்சந்திரன், எஜமானர் தன் வலையில் விழுந்ததை எண்ணி மனத்திற்குள் சந்தோஷப்பட்டுச் சம்மதம் சொன்னான். புது ஒப்பந்தம் கையெழுத்தானது.

ராமபத்ரன் மனமில்லாமல் ஊருக்குப் புறப்பட்டான். ராமச்சந்திரன் ஒரு குயவனுக்கு உதவி ஒரு பானையை மூடியுடன் வாங்கிக் கொண்டான்.

மறுநாள் காலை விறகு கொண்டு வருவதாகச் சொல்லி காட்டிற்குப் போனான். தாழ்ந்திருந்த கிளைகளை ஒடித்துக் கட்டினான். சூரியன் உச்சிக்கு வரும் வரை நன்றாகத் தூங்கினான். பிறகு சுள்ளிக் கட்டோடு செல்வந்தர் வீட்டிற்கு வந்து 'தொப்'பென்று போட்டான்.

"இதுவாடா விறகுக் கட்டு?" என்று கத்தினார் எஜமானர். "நானென்ன தடிதடியாகப் பெரிய கட்டாகக் கொண்டு வருகிறேன் என்றா எழுதிக் கொடுத்தேன். இதுவும் விறகு கட்டுதான்!" என்றான் ராமச்சந்திரன்.

அவனை எரிச்சலோடு பார்த்தார் செல்வந்தர்.

ஒரு தலை வாழை இலை வாங்கி வந்திருந்தான். அதை விரித்து நீர் தெளித்து, "சாப்பாடு போடுங்கள்" என்றான்.

"இங்கே வந்து பாருங்கள்" என்று கூவினார் கஞ்சரின் மனைவி.


"இது என்ன அநியாயம்! தலைவாழை இலையிலா சோறு போடுவதாகச் சொன்னேன்!" என்று கூச்சலிட்டார் எஜமானர்.

"அப்போ ஒப்பந்தத்தில் ஆல இலை என்று எழுதியிருக்கிறதா?" என்று எதிர் கேள்வி கேட்டான் ராமச்சந்திரன்.

"நீ எனக்கு வேலைக்கு வேண்டாம். ஊர் போய்ச் சேர்" என்றார் செல்வந்தர். "வலது கையை வெட்டித் தந்தால் எடுத்துக் கொண்டு போகிறேன். இல்லாவிடில் பஞ்சாயத்துக்குப் போவோம்" என்று வழக்காடினான் ராமச்சந்திரன்.

செல்வந்தர் மனைவி தினமும் தலை வாழை இலையில் சாப்பாடு போடுகிறாள். ராமச்சந்திரனின் கொழு கொழு உடம்பைப் பார்த்து எஜமானர் பெருமூச்சு விடுகிறார்!

சாதனை படைத்தது ஜூனியர் ஹாக்கி அணி!



ஷான் பொல்லாக் (கேப்டன் தெ.ஆ)

ஏழாவது உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது. ஹோபர்ட் நகரில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்திய அணி அர்ஜெண்டினா அணியுடன் மோதியது. இறுதியில் 6 - 1 என்ற கோல் கணக்கில் வென்று உலகக் கோப்பையை முதன் முதலாக வென்றுள்ளது இந்திய ஜூனியர் ஹாக்கி அணி. இப்போட்டியில் இந்தியாவின் தீபக் தாகூர் தொடர்ந்து மூன்று கோல்கள் போட்டு ஹாட்ரிக் சாதனை படைத்தார். 1997ஆம் ஆண்டு நடந்த உலகக் கோப்பை போட்டியில் இறுதி ஆட்டத்தில் இந்திய அணியும் ஆஸ்திரேலிய அணியும் மோதின. 3 - 2 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியா வெல்ல இந்தியா 'ரன்னர்' பட்டத்துடன் திரும்பியது. 1980ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இந்திய சீனியர் அணி தங்கப் பதக்கம் வென்றது. அதற்குப் பிறகு கிடைத்த மிகப் பெரும் வெற்றி இந்த ஜூனியர் உலகக் கோப்பைதான்.



• ஹம்பி



• மைக் டைசன்

கிரிக்கெட்

தென் ஆப்பிரிக்காவில் மூன்று நாடுகளுக்கு இடையே ஒரு தினப் போட்டிகள் நடைபெற்றன. கென்யா, தென் ஆப்பிரிக்கா, இந்தியா பங்கேற்ற இப்போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவும் தென்னாப்பிரிக்காவும் மோதின. முதலில் ஆடிய இந்திய அணி 48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 183 ரன் எடுத்தது. தொடர்ந்து ஆடிய தென் ஆப்பிரிக்கா 42.1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 187 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்திய அணி இறுதி ஆட்டத்தில் தோற்பது இது ஒன்பதாவது முறை.

2வது கிராண்ட் மாஸ்டர் பட்டம்

ஆந்திராவைச் சேர்ந்தவர் கோனேரு ஹம்பி. இவர் சில மாதங்களுக்கு முன்புதான் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றார். இதன் மூலம் இந்தியாவின் இரண்டாவது பெண் கிராண்ட் மாஸ்டர் என்ற பெருமையைப் பெற்றார் ஹம்பி. அக்டோபர் மாதம் இறுதியில் பெல்கிரேடில் நடைபெற்ற கிராண்ட் மாஸ்டர்கள் சதுரங்க போட்டியில் யுகோஸ்லாவிய வீரர் கோரன் கோஸ்னோவிக்குடன் 9வது சுற்றில் டிரா செய்தார். இதன் மூலம் ஒன்பது ஆட்டங்களில் ஏழு புள்ளிகளை எடுத்து இரண்டாவது கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்றார். இது புது சாதனையாகக் கருதப்படுகிறது. ஹம்பிக்கு தற்போது 14 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் டைசன்

முன்னாள் உலக குத்துச் சண்டை சாம்பியன் மைக் டைசன் மீண்டும் ஒரு பெரும் வெற்றியைப் பெற்றுள்ளார். கோபன்ஹேகனில் நடைபெற்ற போட்டியில் டென்மார்க் வீரர் பிரையன் நீல்சனை நாக் அவுட் முறையில் வீழ்த்தினார். இந்த ஆண்டில் டைசன் மோதும் முதல் போட்டியிலேயே மகத்தான வெற்றி கிடைத்துவிட்டது.



கிருஸ்துமஸ் பரிசுகளும் மெழுகுவர்த்தி சடங்குகளும்...

உலகமெங்கும் வண்ண விழாவாகக் கொண்டாடப்படும் கிருஸ்துமஸ் தினத்தன்று பரிசுகள் கொடுப்பது வழக்கமல்லவா? 1500 ஆண்டுகளுக்கு முன்பு தற்போது துருக்கி நாட்டில் உள்ள மிகப் பழமையான சர்ச் ஒன்றில் முதல் பாதிரியாக பொறுப்பேற்றிருந்த செயின்ட் நிகோலஸ், 'சான்டா கிளாஸ்' வேடமணிந்து கழுதையின் மேல் அமர்ந்து வீடு தோறும் சென்று குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கியதாகச் சொல்வதுண்டு. அந்த வழக்கத்தை ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு விதமாகத் தொன்று தொட்டுக் கடைபிடித்து வருகிறார்கள். தெளிவு பெறுவதற்காகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காகவும் மெழுகுவர்த்திகளை ஏற்றிவைப்பது எல்லா நாடுகளிலும் பொதுவான கலாச்சார சம்பிரதாயமாகக் கருதப்படுகிறது. பெரும்பாலும் குளிர்காலத்தில் செய்யப்படும் இந்தச் சடங்குகள் கூட ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாகக் கடைபிடிக்கப்படுகிறது. எப்படி?

ஹாலந்து : சின்டர் க்ளாஸ் என்றழைக்கப்படும் சான்டா கிளாஸ், வெள்ளை குதிரை மீது அமர்ந்து குழந்தைகளை வரிசைப்படுத்த கையில் ஒரு இரும்புக்

கம்பியுடன் வருவதாகக் கருதுகிறார்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு முறை வருகை தரும் இவர் காலணிகளுக்குள் மிட்டாய் பாக்கெட்டுகளை வைத்து விட்டுப் போவார்.

ஃபிரான்ஸ் : ஃபாதர் கிருஸ்துமஸ் என்றழைக்கப்படும் பெர்ரி நொயல் கையில் சிறிய சவுக்குடன் டிசம்பர் 6-ஆம் தேதியன்று தாம் கொண்டு வரும் பரிசுகளைக் குழந்தைகளின் காலணி களுக்குள் வைத்து விடுவார்.

ரஷ்யா : 'கிராண்ட் ஃபாதர் ஃப்ராஸ்ட்' என்றழைக்கப்படும் டைட் மோராஸ்தான் இவர்களுக்கு சான்டா கிளாஸ். வெள்ளை மீசை, தாடி, அழகாக வெட்டிவிடப்பட்ட உரோம தொப்பி, ஜொலிக்கும் நட்சத்திரங் களுடன் கூடிய சிவப்பு அங்கி. கிரெம்ளின் விழாவிலிருந்து ஸ்புட்னி க்கில் வருவது போன்ற அலங் காரத்துடன் வரும் இவர், ஜனவரி முதல் தேதியன்று குழந்தைகளுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்குவார்.

டென்மார்க் : சிறு வர்கள் கதைகளில் வரும் குறும்புக்கார தேவதை போன்ற 'ஜூலி நிஸ்ஸென்' தான் இங்கு கிருஸ்துமஸ் தாத்தா. நீண்ட மரப்பெட்டி ஒன்றில் வசிக் கும் இவர், குடும்பத்தினர் தேவைகளையும் நலனையும் கவனித்துக் கொள்வ தாகச் சொல்லப்படும் ஜூலி ப்யூகென் எனப்படும் கிருஸ்து மஸ் ஆடு மீது அமர்ந்தபடி வலம் வருவார்.

இத்தாலி : இந்த நாட்டைப் பொறுத்த வரை 'லா பெஃ பானா' (பழைய சூனியக்காரி) தான்





கிருஸ்துமஸ் தாத்தாவாகக் கருதப்படு கிறார். புத்திசாலி மனிதர்களைக் கௌரவிக்கும் வகையில் ஜனவரி ஆறாம் தேதிக்கு முந்தைய தினம் பரிசுகளைக் கொண்டு வந்து கொடுப்பார்.

செக்கோஸ்லேவேகியா : இந்த நாட்டிலுள்ள குழந்தைகளுக்குப் புண்ணிய புருஷர், ரட்சகன் எல்லாமே செயின்ட் நிகோலஸ்தான். மெல்லிய தங்க இழைமீது தேவதைகள் துணையுடன் சொர்க்கத்திலிருந்து இறங்கி வருவதாகக் கருதுகிறார்கள். அவர் கையில் உள்ள சுழல் சாட்டை கறுப்பு, துஷ்ட தேவதைகளை விரட்டுகிறதாம். இவர் வருவதற்கு முன்பே குழந்தைகள் விரைந்து சென்று தாங்கள் வந்திருப்



பதைத் தெரிவிக்கும் வகையில் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடுவதுண்டு.

மெக்ஸிகோ : மூன்று ராஜாக்கள் என அழைக்கப்படும் இவர்கள் ஒட்டகங்கள்மீது அமர்ந்து வந்து ஜனவரி 6-ஆம் தேதியன்று குழந்தைகளுக்குப் பரிசுகளைக் கொண்டு வந்து தருவார்கள். குழந்தைகளோ ஒட்டகங்களுக்காகப் புற்களைக் காலணிகளுக்குள் வைத்து பால்கனியில் தொங்கவிடுவார்கள். பதிலுக்கு அவற்றில் பரிசு பொருட்கள் வைத்துவிட்டுச் செல்வார்கள், மூன்று ராஜாக்கள்!

மெழுகுவர்த்தி சடங்குகள்

ஸ்காண்டிநேவியாவில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 13ஆம் தேதியன்று



குடும்பத்தில் உள்ள மூத்த பெண் தலையில் கிரீடம் போல் அமைத்து அதில் மெழுகுவர்த்திகளை ஏற்றி வெள்ளை உடையணிந்து சான்டா லூசியாவின் சார்பாக பெற்றோர்களுக்கு அவர்களுடைய படுக்கையிலேயே சிற்றுண்டி வழங்கவேண்டும். இதனால் சான்டா லூசியா மகிழ்வுற்று எதிர்காலத்தில் நல்ல அதிர்ஷ்டங்களைக் கொடுப்பதாகக் கருதுகிறார்கள்.

அரிஸோனாவிலும் நியூ மெக்சிகோவிலும் கிருஸ்துமஸ் தினத்தை வீட்டிற்குள் கொண்டாடுவதைவிட

வெளியில் கொண்டாடுவது மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. தெரு ஓரங்களிலும் வீட்டின் மேற்கூரை மற்றும் பால்கனிகளில் வரிசையாகக் காகிதப் பைகளுக்குள் சிறிதளவு மண்ணை நிரப்பி அதற்குள் வெகு ஜாக்கிரதையாக மெழுதுவர்த்திகளை செருகி ஏற்றி வைப்பார்கள். ஏசு கிருஸ்துவை குழந்தை யாக பாவித்து அவரை வரவேற்கும் பொருட்டு இப்படி செய்வதுண்டு.

அமெரிக்க கறுப்பர்கள், ஆப்ரிக்க நாட்டின் மரபுப்படி கினாரா என்று சொல்லப்படும் ஸ்டாண்ட் ஒன்றில் ஏழு கொள்கைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஏழு மெழுகுவர்த்திகளைச் செருகி வைப்பார்கள். பின்னர் தினமும் ஒவ்வொரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடி ஒவ்வொரு கொள்கை பற்றியும் விவாதிப்பார்கள். குவான்ஸா என்று சொல்லப்படும் இந்த நிகழ்ச்சி டிசம்பர் 26 முதல் ஜனவரி முதல் தேதிவரை நடைபெறும். இதற்கு ஆப்ரிக்க மொழியில் 'முதல் கனிகள்' என்று பொருள்.

தாய்லாந்து மக்கள் ஒவ்வொரு ஆண்டும் பன்னிரெண்டாவது மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று 'லாய் க்ராதாங்' என்ற சடங்கைக் கொண்





டாடி வருகிறார்கள். 'க்ராதாங்' என்றால் மலர்ந்த தாமரை என்று பொருள். ஒவ்வொருவரும் வாழை இலை, சரிகை அல்லது எண்ணெய் காகிதத்தில் தாமரை வடிவத்தில் பூக்களை உருவாக்குவார்கள். சிறிய படகுபோல் தோற்றமளிக்கும் இவற்றில் மெழுகு வர்த்திகளை வைத்து ஏற்றி கூடவே சிறிய காசுகள், பூக்கள் போன்றவற்றை வைத்து ஆறு அல்லது ஏரிகளில் மிதக்க விடுவார்கள். வாழ்க்கையைப் புதுப்பிக்கும் நிகழ்ச்சியாக இதைக் கருதுகிறார்கள்.

யூதர்கள், 'ஹனுக்கா' (சுதந்திரமாக விடுவிப்பது என்று பொருள்) என்றொரு சடங்கை, சிரியாவை எதிர்த்து தாங்கள் வெற்றி பெற்றதைக் குறிக்கும் வகையில் குளிர் காலத்தின் மையப் பகுதியில் அனைவருக்கும் எட்டு தினங்கள் விடுமுறை அளித்துக் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு நாள் இரவும் குடும்பத்தினர் ஒன்றாக அமர்ந்து மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து ஆசி பெறுவதற்காகப் பிரார்த்தனை கீதங்கள் பாடுவதுண்டு. மெழுகுவர்த்திகளை ஏற்றி வைப்பதன்மூலம் இருள் அகன்று தெய்வீக ஒளி இடம் பெறுமென்று நம்புகிறார்கள்.

- அ. குமார், பெங்களூர்.

16 ஆளப் பிறந்தவன்!

கதை: ராஜி படம்: லலிதா





என்னிடம் நீ சிறைப்பட்டிருக்கிறாய்.
என்னை மறைந்திருந்து சிறைப் பிடித்ததும் அல்லாமல் பெருமை வேறா?
அகப்பட்டுக் கொண்ட ஆத்திரத்தில் அரற்றாதே! அடங்கிக் கிட. இன்றோடு உன் ஆர்ப்பாட்டங்களெல்லாம் சரி.
இவ்விருவரையும் அந்தக் குகைக்குள் தள்ளிப் பாறையைக் கொண்டு மூடி விடுங்கள். இன்றோடு முடிந்தது ஜெயசிம்மன் ஆட்சி.
உத்தரவு ஐயா...!


வீரசிம்மா வீண் பகற்கனவு காணாதே! நீ என்றுமே அரசனாக முடியாது.
ஹா...ஹா... இதையே சொல்லிக் கொண்டு இந்தக் குகைக்குள்ளேயே கிட... உள்ளே தள்ளுங்கள்!
ஹா...ஹா.. இனி நான்தான் இந்நாட்டு அரசன்.
இளவரசே! என்னால்தான் உங்களுக்கு இந்தத் துன்பம். எங்கும் போக வேண்டாமென்று நான் உங்களைத் தடுத்திருக்க வேண்டும். நான் கடமை தவறி விட்டேன்.
நீ தடுத்தால் நான் தயங்கி விடுவேனா?


இங்கிருந்து தப்பும் வழியே தெரியவில்லை. பட்டினியால் சாக வேண்டியதுதான்.
லைலா, அதோ பார் சூரிய ஒளி!
இந்த ஒளிக்கற்றையைப் பிடித்தபடி ஏறப்போகிறீர்களா இளவரசே?
கேலி செய்கிறாயா? இதோ இந்தக் கிளியை மறந்து விட்டாயா?
இந்த இலையில் குறிப்பு எழுதி கிளி மூலம் அனுப்பப் போகிறேன்.
தொடரும்



64
வலிமையான எலும்புகள் 63
காலந்தவறி உண்ணுதல் 62
ஆரோக்கியமான பற்கள் 61
பால் 49
50
51
52 சமச்சீர் வளர்ச்சி
53
எண்ணெய்ப் பண்டங்கள் 48
ரோஜா நிறக் கன்னங்கள் 47
சீத்தாபழம், தயிர், பால் 46
கண் நோய் 45
முளைக்கட்டிய பயறு 44
33
34
35 வளர்ச்சி
பராமரிக்கப்படாத தலைமுடி 36
நோய் எதிர்ப்பு சக்தி 37
அஜீரணம் 32
தூக்கமின்மை 31
உடல் வலிமை 30
முட்டைகள் 29
28
பழங்கள் 17
18
சிறந்த கண் பார்வை 19
20
21
16 அழுக்கு நகங்கள்
15
தசை வளர்ச்சி 14
13
12. பேன் தொல்லை
உடல்நலமின்மை 1
2
இறைச்சி 3
காது கேளாமை 4
தேன் 5



ஆரோக்கிய பரமபதம்

விடுமுறையில் இந்த மழைக் காலத்தில் வெளியில் சென்று விளையாட முடியாது. எனவே நீங்கள் வீட்டிலேயே உட்கார்ந்து விளையாடும் வகையில் இந்த விளையாட்டு உங்களுக்கு உதவும். வெறும் விளையாட்டு மட்டுமின்றி உடல் ஆரோக்கியத்துக்குப் பல தகவல்களையும் இந்த விளையாட்டின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். இது உங்களுக்கு மட்டுமின்றி உங்கள் பெற்றோருக்கும் பிடிக்கும்.

இவ்விளையாட்டுக்கு குறைந்த பட்சம் இருவர் தேவை. அதிக பட்சம் 6 பேர் கூட விளையாடலாம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான காய் வேண்டும்.

பகடை அல்லது சோழியைப் பயன்படுத்த வேண்டும்.

தாயம் போட்டு ஆரம்பிக்க வேண்டும்.

ஏணியின் மூலம் நீங்கள் பல கட்டங்களைத் தாண்டலாம். பாம்பின் மூலம் பல கட்டங்கள் இறங்க வேண்டியிருக்கும்.

முதலில் யார் எண். 64 ஐஸ்கிரீம் கப்பை அடைகிறாரோ அவரே வெற்றி பெற்றவர்.

என்ன, விளையாடலாமா?


கருத்து : **சாய்தீபக், விஜயநகரம்**

படம் : **லலிதா**

எங்கள் ஊரில் நடந்தது!

பசு

நானும் எங்கள் அத்தைப் பெண் சபிதாவும் பல்லாங்குழி ஆடிக் கொண்டிருந்தோம். அவரவர் குழிகளில் நான்கு முத்துகள் சேர்ந்ததும் 'பசு' என்று சொல்லி எடுத்துக் கொள்வது எங்கள் விளையாட்டு முறை. சபிதாவின் குழிகள் அடிக்கடி காலியாகி இருப்பதைப் பார்த்து அவளை ரகசியமாகக் கண்காணித்தேன். மூன்று முத்துகள் குழியில் சேர்ந்ததும் பசு என்று சொல்லி எடுத்தாள். "பசுன்னா நாலு இருக்கணும்.




மூணு இருந்தா பசு கிடையாது. ஏய்க்காதே" என்று மிரட்டினேன் நான். "நல்ல பசுக்குத்தான் நாலு. இது நோஞ்சான் பசு. இதுக்கு மூணுதான்." என்று சபிதா சொல்ல சிரித்து விட்டேன்.

- துர்கா காத்யாயனி, 10ம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

பெயர்?

அப்பாவுக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். என் தம்பியிடம் அவர் "உன் பெயரென்ன?" என்று கேட்க, குறும்புக்காரத் தம்பியோ யோசிப்பதுபோல் நடித்தான். உடனே அவர் "உன் பெயரே உனக்கு மறந்துபோச்சா?" என்று கேட்டார். "ஆமாம் பத்து வருசத்துக்கு முன்னாடி நான் குழந்தையா இருக்கும்போது வச்ச பெயராச்சே. அதான் மறந்துபோச்சு" என்று சொல்ல அனைவரும் சிரித்துவிட்டோம்.



சிறிது நேரம் கழித்து தன் பெயரைக் கூறினான் தம்பி.

- கி. ராஜசேகரன், ராஜபாளையம்

எந்த ஊர்?

இந்த ஆண்டு ஜனவரி மாதம் எங்கள் அக்கா மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூருக்குத் தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் கலந்து கொள்ளச் சென்றிருந்தாள். பொங்கலுக்கு வீட்டுக்கு வந்த எங்களின் தாத்தா அக்காவை விசாரித்தார். "அக்கா கேம்ப் போயிருக்கா" என்று நான் சொன்னேன். "எந்த ஊருக்குப் போயிருக்கா?" என்று அவர் கேட்டார். "இந்தூருக்குப் போயிருக்கா." என்று நான் சொன்னவுடன் அதைச் சரியாகக் கவனிக்காத அவர் "கேம்ப்னா வெளியூருக்குப் போவாங்க. இந்த ஊர்லேயே கேம்ப்பா?" என்று கேட்டதும் நான்

முள்ளை முள்ளால்



சிரித்து விட்டேன்.

- சௌம்யா, எட்டாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் ம.மே.பள்ளி, தூத்துக்குடி.

முள்

எங்கள் நண்பனுக்குக் காலில் முள்



குத்திவிட்டது. அன்று முழுவதும் நொண்டியபடியே நடந்து திரிந்தான். மறுநாள் வந்த அவனைப் பார்த்ததும் எங்களுக்கெல்லாம் அதிர்ச்சி. காரணம், முந்தைய நாளைவிட இன்று ரொம்பவே நடக்க முடியாமல் நொண்டிக் கொண்டு அவன் வந்ததுதான். நண்பர்கள் நாங்கள்,''என்னடா முள் எடுத்துட்டியா? ஏன் ரொம்ப நொண்டறே?'' என்றோம் வருத்தத்தோடு. உடனே அவன், ''முள்ளை முள்ளால் எடுக்கணும்னு சொல்வாங்கள்ல. அதான் பெரிய முள் ஒண்ணு எடுத்து முள்ளை எடுக்கப் போராடினேன். அந்த முள்ளும் முறிந்து இப்போது ரெண்டு முள்ளாகி விட்டது. ப்ளீஸ், எடுத்து விடுங்கடா, வீட்டில் யாருமில்லை'' என்றானே பார்க்கலாம்! எங்களுக்கு ஒரே சிரிப்பாகிவிட்டது. ''ஊசி கூட ஒரு முள்தாண்டா'' என்று சொல்லி, முள்ளை எடுத்துவிட்டோம். ஸெப்டிக் ஆகாதிருக்க தக்க மருந்து போட்டோம்.

- ராமகிருஷ்ணன், காயக்காடு.

எடுக்கலாமா?

படிப்பு

நானும் என் தங்கையும் டி.வி. பார்த்




துக் கொண்டிருந்தோம். அப்போது பழைய பேப்பர் வாங்குபவர் வரவே, டி.வி.யை அணைத்துவிட்டு, பழைய பேப்பர்களை மொத்தமாக ஒரு இடத்தில் வைத்தோம். அப்போது என் தங்கை, ''அம்மா பேப்பரை இவரிடம் ஏன் போடுகிறீர்கள்?'' என்று கேட்டாள். அம்மாவும், ''இதைப் படித்து முடித்து விட்டோம். அதனால் தான் போடுகிறோம்'' என்று கூறினார். அதற்கு அவள், ''இவ்வளவு பேப்பரை எப்படிதான் இவர் படித்து முடிக்கப் போகிறாரோ!'' என்று கூறினாள். உடனே அனைவரும் சிரித்து விட்டோம். பிறகு அது அவர் படிப்பதற்கு அல்ல, மறு சுழற்சி முறைக்கு என்று கூறி அவளுக்குப் புரிய வைத்தேன்.

- எம். வினோதா, விருதாச்சலம்

பால்

ஒரு நாள் அம்மா பாலில் சிறிது தயிறை ஊற்றி உறைய வைத்தார். அதைப் பார்த்த எங்கள் வீட்டு வாண்டு



சூர்யா ஏனென்று கேட்டான். அம்மா அவனிடம் ''பால் எல்லாம் தயிராகிவிடும்'' என்றார். பிறகு ஒரு நாள் வீட்டிற்குத் திடீரென உறவினர்கள் வந்துவிட்டனர். அம்மா ''காபி போட பால் இல்லையே'' என்றார். உடனே சூர்யா ''இந்தத் தயிர்ல கொஞ்சம் பால் ஊத்துங்க'' என்றான். நாங்கள் புரியாமல் விழிக்க, அவனோ ''அப்பத்தான் தயிர் பால் ஆகும்'' என்றானே பார்க்கலாம்!

- எம். மகேஷ், தாரமங்கலம்

9. கார் பழசு! ஆசாமி புதுசு!

நடேசனுக்கு அந்த இடம் பழக்க மானது. அதனால் போன் எங்கே இருக் கும் என்று தேட வேண்டிய அவசியம் இல்லை. அருகேயுள்ள அரிசிக் கடையில் போன் இருப்பது அவனுக்குத் தெரியும். அரிசிக் கடைக்காரரையும் அவனுக்குத் தெரியும். அதனால் 'சில்லறையா ரெண்டு ரூபாய் இருக்கா!' என்னும் கேள்வி கேட்காமல் கடைக்காரர் அவனை போன் செய்ய அனுமதித்தார்.

நடேசனின் விரல் அவசர அவசரமாக, போனில் மாறன் வீட்டு எண்களை அழுத்தியது.


டெலிபோன் மணி ஒலித்தது. மூன்று ஜோடி 'டிரிங்'குக்குப் பிறகு, மறுமுனை 'ஹலோ' சொன்னது. அது ஆண் குரலா - பெண் குரலா - என்பதைச் சின்னக் குழந்தைகூடச் சிரமமின்றி அறிந்து கொள்ளலாம். அவ்வளவு தெளிவான குரல். என்றாலும் நடேசனுக்கு இருந்த அவசரத்தில், அதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் - பொருட்படுத்தாமல், ''மாறா! மாறா! நான் நடேசன் பேசறேன். அந்த காரைப் பாத்துட்டேன். மனோ அதன் பின்னே போயிருக்கிறான். நீ உடனே புறப்பட்டு வா! எங்கே வர ணும்னு சொல்றேன். கேட்டுக்கோ...'' என்று அவசர அவசரமாகப் பேசியவனை, மறுமுனையின் பெண் குரல் மறித்தது.

''தம்பி, மாறனில்லேன்னு நான் சொல்லச் சொல்ல, நீ பாட்டுக்குப் பேசிக் கிட்டே போறியே. கொஞ்சம் நான் சொல்றதைக் கேளு. மாறன் ஸ்கூலுக்குப் போயிட்டான்.'' என்று கூறியது.

நடேசன் திடுக்கிட்டான்.

'ஓ, மாறனின் அம்மா போலிருக்கிறது. அவங்க சொல்றதைக் கூடக் கேட்காம, நான் பேசறேன்?' என்று ஒரு கணம் நினைத்து வெட்கப்பட்ட நடேசன், மீண் டும் அப்போதைய அவசரத்தை நினைத் தவனாய், ''சாரிங்க...'' என்று சொல்லி, 'சட்'டென்று இணைப்பைத் துண்டித் தான்.

மாறன் பள்ளிக் கூடத்துக்குப் போயிட்டான். பள்ளிக் கூடத்துக்கு போன் செய்ய முடியாது.



இதை உணர்ந்ததும் தான் மட்டுமாவது தாமரைச் சின்னம் கொண்ட காரைப் பிடித்தாக வேண்டும் என்று முடிவு செய்து ''போனுக்குப் பணம், அப்புறம் தரேன்'' என்று கடைக்காரரிடம் சொல்லிவிட்டு, கார் போன திசையில் - நடை பாதையில் ஓடினான். வெள்ளை அம்பாசிடரைக் கண்கள் தேட, கால்கள் நூறு மீட்டர் பந்தய வேகத்தில் ஓடின.

மீண்டும் சிவப்பு சிக்னல் விழுந்ததால் கார்கள் அசைவற்று நின்றன. அவசரக்காரர்களின் ஹாரன் ஒலி தொடர்ந்து ஒலித்தது.

நடேசன் ஓடிக் கொண்டே தேடினான்.

அம்பாசிடர்கள் பல தெரிந்தன. ஒன்றிரண்டே சொட்டு நீலம் போட்ட, வெள்ளைப்பட்டாய் ஒளிர்ந்தன.

ஆனால் தாமரை வடிவில் பெயிண்ட் உதிர்ந்த காரைக் காணோம்.

முன்னாள் பூந்தமல்லி சாலையில் - இந்நாள் பெரியார் ஈ.வெ.ரா.



சாலையில் - ஓடி வந்தவன், வடக்கே அண்ணா நகர் செல்லும் பாதை சேரும் இடம் வந்ததும் நின்றான்.

"தொடர்ந்து நெடுஞ்சாலையில் ஓடுவதா? அண்ணா நகர் செல்லும் பாதையில் திரும்புவதா?"

நடேசன் குழப்பத்தோடு நின்றான்.

அப்போது அவனுக்கு வெகு அருகே ஒரு மொபட் வந்து நின்றது. அதில் இருந்த இளைஞன், "நடேசா, வண்டியில் ஏறு. மனோ உன்னை அழைச்சிட்டு வரச் சொன்னான்" என்றான்.

அந்த இளைஞன் மனோ வீட்டின் அருகே குடியிருப்பவன். அவனை நடேசனுக்குத் தெரியும். அதனால் ஒரு நொடியும் தாமதிக்காமல் வண்டியில் ஏறி உட்கார்ந்து, அவன் தோளைப் பற்றிக் கொண்டான்.

அந்த இளைஞன் கொஞ்ச நேரம் முன்பு அதே சாலையில் அதே இடத்தில் சென்றபோது, காரைத் துரத்திய மனோவின் பார்வையில் பட்டான். அவன் இவனை நிறுத்தி வண்டியில் ஏறிக் கொண்டு, முன்னே செல்லும் காரை விரட்டிச் செல்லுமாறு வேண்டினான். அவ்வாறே அவனும் விரட்டிச் சென்றான். கார், ஷெனாய் நகர் நெரிசலிலுள்ள மாநகராட்சிப் பள்ளி முன் நின்றது. இளைஞனும் அந்த இடத்தை அடைந்தான். மனோ வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டு, "வந்த வழியே திரும்பிப்போ. நடேசன் தென்படுவான். அவனை அழைத்துக் கொண்டு இங்கே வா" என்று கூறி அனுப்பினான். அதன்படி வந்தவன்தான் இப்போது நடேசனை ஏற்றிக் கொண்டு சென்றான்.

மொபட் மாநகராட்சி பள்ளியை அடைந்தது.

மொபட்டிலிருந்து இறங்கும்போதே, நடேசன் பள்ளியின் சுற்றுச் சுவரை ஒட்டி நிற்கும் வெள்ளைக்காரைப் பார்த்துவிட்டான். ஆனால் அங்கே மனோகரன் இல்லை.

'மனோ எங்கே? காரில் வந்தவர்கள் எங்கே?'

நடேசன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, பள்ளிக்குள்ளிருந்து மனோ வெளிப்பட்டான்.

நடேசன் அவனை நோக்கி ஓடினான்.

"மனோ, கார் இங்கே நிற்கிறது. காரில் இருந்த ஆசாமிகள் எங்கே?" என்று கேட்டான்.


"காரில் இருந்த இருவரும் பள்ளிக்குள்ளே போனார்கள். அதனால் நானும் உள்ளே போனேன். இருவரும் ஹெச்.எம். அறைக்குள் சென்றுவிட்டார்கள். அதற்குள் பியூன் "என்ன வேணும்! ஏன் இங்கே நிக்கறே?" என்று கேட்டதும், நான் ஒண்ணுமில்லேனு சொல்லிட்டு வந்துட்டேன். அவங்க இன்னும் உள்ளேதான் இருக்கிறாங்க. நீ மாறனுக்கு போன் செஞ்சியா? என்ன சொன்னான்?"

மனோகரன் கேட்டான்.

"மாறன் பள்ளிக்குப் போயிட்டானாம். மனோ, காரில் இருந்தவங்க முகத்தை நான் பார்க்கலே. ஒரு வேளை என்னைக் கடத்தினவங்களா இருந்தா, எனக்கு ஆபத்து. மாறன் வந்தா நல்லது" என்றான் நடேசன்.

மொபட் ஓட்டி வந்த இளைஞன் இன்னமும் அங்கேயே நின்றிருந்தான்.

"அண்ணா, ரெண்டு உதவி செஞ்சிட்டே. மூணாவதா, இன்னொரு உதவியும் செஞ்சிடு. எங்க ஸ்கூல் தெரியுமில்லே, அங்கே போய் ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் நெடுமாறனை, நானும் நடேசனும் அழைப்பதாகக் கூறி இங்கே



அழைச்சுட்டு வரணும். வகுப்பு தொடங்கியிருந்தாலும் வகுப்பில் போய்க் கூப்பிடு. 'தாமரைப்பூ அம்பாசிடர் காரைக் கண்டு பிடிச்சாச்சு'ன்னு சொல்லு. உடனே வந்திடுவான். ப்ளீஸ் அண்ணா!''

''சரி மனோ'' என்று கூறிய இளைஞன் மொபட்டில் அமர்ந்து அதைக் கிளப்பி விரட்டினான்.

மனோவும் நடேசனும் பள்ளிக்குள் எட்டிப் பார்த்தார்கள். சில நிமிடங்களில் காரில் வந்த இருவரும் கேட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்கள் முகம் சரியாகத் தெரிவதற்கு முன்னே, நடேசனின் உடலில் லேசான நடுக்கம்.

''மனோ, நீ இங்கேயே இருந்து கவனி. நான் அதோ அந்த தூங்குமூஞ்சி மரத்தின் பின்னால் மறைஞ்சு நிற்கிறேன்'' என்று கூறிய நடேசன், ஒரே ஓட்டமாக ஓடி மரத்தின் பின்னே நின்றான். அது அவனையும், அவனைப் போல இன்னும் இரண்டு மூன்று பேரையும் மறைக்குமளவு அடி பருத்ததாய் இருந்தது. அதனால் நடேசனின் உடல் நடுக்கம் குறைந்தது. மனதின் நடுக்கம் குறையவில்லை. அவன் கண்கள் பள்ளிக் கூடத்தின் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தன.

மனோகரன் பள்ளிச் சுவரில் சாய்ந்து நின்றான். அவன் பார்வை மட்டும் பள்ளியின் வாயிலில் படிந்திருந்தது.

சில நொடிகளில் உயரமான, நல்ல உடையணிந்த இரண்டு பேர் நிதானமாக வெளியே வந்தனர். காரை நோக்கி நடந்தனர். காரில் ஏறும் முன் மீண்டும் இருவரும் பள்ளிக் கட்டடத்தைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு காரில் ஏறினர். மறு நொடி கார் அங்கிருந்து புறப்பட்டது.

மரத்தின் மறைவிலிருந்து நடேசன் ஒருவகை நிம்மதியோடு வெளியே வந்தான். மெதுவாக நடந்து மனோகரனின் அருகில் சென்றான். அவன் எதுவும் கேட்கும் முன்னதாகவே, ''மனோ, என்னைக் கடத்தினவங்க, இவங்க இல்லே. இவங்கள பார்த்தா பெரிய இடத்து



ஆசாமிங்களா தெரியுது'' என்றான்.

''அது சரி. மாறன் இன்னும் வர லையே!''

மனோ சொல்லி முடிக்கும் முன் மொபட் அங்கே வந்து நின்றது.

''நடேசா, மனோ, என்ன நடந்தது? அம்பாசிடர் காரிருக்குன்னு இவர் சொன்னாரே, கார் எங்கே?''

மாறன் கேட்டான்.

நடேசன் பதில் சொல்ல நினைத்தான். அதற்குள் மொபட் இளைஞன், ''மனோ, நான் போகலாமா?'' என்று கேட்டான்.

''அண்ணா ரொம்ப தேங்க்ஸ். புறப்படு'' என்றான் மனோ.

நடேசனும் மாறனும்கூட அந்த இளைஞனுக்கு நன்றி தெரிவித்தனர்.

நடேசன் தான் கடத்தப்பட்ட அதே காரைக் கண்டது முதல் அதுவரை நடந்தவற்றை விவரித்தான்.

''அதே கார். ஆனால் ஆசாமிகள் வேறே. புதிய ஆசாமிகளுக்கு இந்தப் பள்ளியின் தலைமையாசிரியரிடம் என்ன வேலை?'' - மாறன் தன்னையே கேட்டுக் கொள்வது போல மெதுவாகச் சொன்னான்.

''மாறா, நாம் ஹெச்.எம்.மைப் பார்த்து அந்த ஆசாமிகள் எதற்கு வந்தனர் என்று கேட்போமா? இந்த ஸ்கூல் ஹெச்எம் ரொம்ப நல்ல மாதிரின்னு கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றான் மனோகரன்.

''தேவையானால் இந்த ஆசாமிகள் வந்த காருக்கும் எனக்கும் உள்ள தொடர்பைச் சொல்லலாம்'' என்றான், நடேசன்.

மூவரும் பள்ளிக்குள் சென்றனர்.

மனோ சொன்னது போல அந்த ஹெச்.எம். நல்லவர். மிகவும் நல்லவர். அதனால்தான் வந்தவர்கள் பக்கத்துப் பள்ளியின் மாணவர்கள் என்று அறிந்ததும் அவர்களை வரவேற்று, அன்போடு விசாரித்தார்.

நெடுமாறன் பேசத் தொடங்கும்முன், ''சார், மூவேந்தர் புத்தக வங்கி பற்றிக் கேள்விபட்டிருப்பீர்களே, அதை நிறுவியவர்கள், இந்த நெடுமாறனும் நண்பர்களும்தான் சார்'' என்று மனோகரன் பெருமகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் அறிவித்தான்.

ஹெச்.எம். மாறனைப் பாராட்டினார்.

பின்பு மாறன் பேசினான் :

''சார், கொஞ்சம் முன்பு இரண்டு ஆசாமிகள் உங்களைச் சந்தித்தார்களே, அவர்கள் எந்த விஷயமாக உங்களைச் சந்தித்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?''

''தெரிந்து கொள்ளலாம். தெரிவிக்கிறேன். அந்த ஆசாமிகளுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு?''

தலைமையாசிரியர் கேட்டதும் மாறன், நடேசன் கடத்தப்பட்டதை விளக்கமாகக் கூறினான். அதே காரில் இவர்கள் வந்ததால் தாங்கள் பின் தொடர்ந்து வந்ததைத் தெரிவித்த மாறன், ''சார், நடேசன் எங்கள் பள்ளியில் ரேங்க் வாங்கும் மாணவன். இவனைப் போன்ற மிகச் சிறந்த மாணவர்களை ஒரு கூட்டம் கடத்துகிறதோ என்று ஒரு சந்தேகம்'' என்றும் கூறினான்.

இதைக்கேட்ட ஹெச்.எம். திடுக்கிட்டார்.


''மாறா, வந்த ஆசாமிகள், தாங்கள் செய்திக்கதிர் நாளிதழிலிருந்து வருவதாகவும், ஒவ்வொரு பள்ளியிலும் பயிலும் மிகச் சிறந்த மாணவர்களைப் பேட்டி கண்டு அவர்களது வெற்றியின் ரகசியத்தை மற்ற மாணவர்கள் அறிந்து பயனடையச் செய்யும் திட்டம் இருப்ப

''இவர்தான் என் கார் டிரைவர்.''

''உங்ககிட்ட காரே கிடையாதே?''

''கார் வாங்கற அளவுக்கு வசதி இல்லை. அதான் டிரைவர் மட்டும் வச்சிருக்கேன்!''

-எம். வினோத், விருதாச்சலம்



தாகவும் தெரிவித்தார்கள். எங்கள் பள்ளியின் சிறந்த இரண்டு மாணவர்கள் பெயரைக் கேட்டார்கள். சொன்னேன். பேட்டிக்குப் பிரிதொரு நாள் வருவதாகத் தெரிவித்துச் சென்றார்கள். மாறா, உன் சந்தேகம் சரி. நான் என் மாணவர்களை எச்சரிக்கை செய்கிறேன்'' என்றார் ஹெச்.எம்.

''சார், என் நண்பனின் தந்தை ஒரு நாளேட்டில் பணி செய்கிறார். அவர் மூலம் செய்திக்கதிருக்கு இப்படி ஒரு திட்டம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள முடியும். இது தொடர்பாக வேறு செய்தி தெரிந்தால், உங்களுக்கும் தெரிவிக்கிறோம்.'' என்றான் மாறன்.

பின்பு மாறன் முதலிய மூவரும் விடை பெற்றுச் சென்றனர்.

மூவரும் அன்று அரைமணி தாமதமாகவே பள்ளிக்குச் சென்றனர்.

காலை இடைவேளையின்போதே, மாறன், அருள்மொழி, இளங்கோ மூவரும் கலந்து பேசினர். இளங்கோ பள்ளியிலிருந்தே தொலைபேசி மூலம் தன் தந்தையுடன் தொடர்பு கொண்டான். செய்திக்கதிர் நாளேட்டில் ரேங்க் வாங்கும் மாணவரின் பேட்டி வெளியிடும் திட்டம் உண்டா? என்று, கேட்டதுடன் வெள்ளை அம்பாசிடர் காரின் நம்பரைத் தெரிவித்து, காரின் உரிமையாளர் யார் என்று அறிந்து தெரிவிக்குமாறும் வேண்டினான்.


அன்றிரவே இளங்கோவன் தந்தை இரண்டு கேள்விகளுக்கும் விடை அறிந்து தெரிவித்தார்.

செய்திக்கதிருக்கு மாணவர்களைப் பேட்டிகாணும் திட்டம் இல்லை.

அம்பாசிடரின் எண், உண்மையில் ஒரு லாரிக்கு உரியது. அதனால் காரின் நம்பர் பிளேட் போலி.

இப்போது என்ன செய்வது?

மறுநாள் மூவேந்தர்கள் உணவு இடைவேளையின்போது, பள்ளியின் அரச மரத்தடியில் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள். அவர்களுடன் மனோவும் நடேசனும் இருந்தனர். அப்போது எட்டாம் வகுப்பு மாணவன் ஒருவன் வந்து, ''மாறா, நான் கணக்குப் புத்தகம் கேட்டேனே, கிடைச்சுதா?'' என்று கேட்டான்.



''எதுக்குப் பல்லைப் பிடுங்கறதுக்குப் போய் வீட்டுப் பத்திரத்தையெல்லாம் கொண்டு வந்து காட்டுறீங்க?''

''நீங்க தானே 'சொத்தை பார்த்துத் தான் பிடுங்குவேன்'னு சொன்னீங்க டாக்டர்!''

- எம்.வினோத், விருதாச்சலம்

நேற்றைய பரபரப்பில் மாறன் அதை மறந்துவிட்டான். அதனால், ''மன்னிக்கணும். வீட்டிலே எடுத்து வைச்ச புத்தகத்தைக் கொண்டு வர மறந்துட்டேன். நாளைக்குத் தவறாம தந்துடறேன்.'' என்றான்.

வந்தவன் செல்ல, ''மாறா, உன் வங்கியின் சேவை எனக்கும் தேவை. அதுவும் ஒண்ணு ரெண்டு புத்தகங்களல்ல. ஒன்பதாம் வகுப்புப் புத்தகங்கள் அனைத்தும் தேவை. என் புத்தகங்களைப் பையோடு, என்னைக் கடத்திய காரில் விட்டுவிட்டேன். என்ன.. ஒரு செட் ஒன்பதாம் வகுப்புப் புத்தகங்கள் கிடைக்குமா?'' என்று கேட்டான் நடேசன்.

'உனக்கில்லாமலா? நிச்சயம் கிடைக்கும்' என்று சொல்ல நினைத்தான் மாறன். அதற்குள் ஒன்பதாம் வகுப்புப் புத்தகங்கள் அடங்கிய பையோடு, அவர்களிடம் வந்தான் ஒரு பள்ளி மாணவன். அவன் கையிலிருந்த பையைப் பார்த்ததும், ''உன் கைக்கு எப்படி வந்தது?'' என்று ஆர்வமும் ஆனந்தமுமாய்க் கேட்டான், நடேசன்.

ஆமாம், அவனைக் கடத்திய காரில் விட்டுவிட்ட நடேசனின் புத்தகப் பை, இவன் கைக்கு எப்படி வந்தது?

(தொடரும்)




போன்சாய் மரம் வளர்ப்பு கி.மு. 1000 ஆண்டிலேயே வசதி படைத்த சீனர்கள் மற்றும் ஜப்பானியரால் ஆரம்பித்து வைக்கப் பட்டது. போன்ஸாய் 1800களில் சீனாவில் மிகவும் பிரபலமடைந் தது. 1900களில் உலகெங்கிலும் இது பிரபலமடைந்து விட்டது. தங்கள் அந் தஸ்தைக் காட்டும் ஓர் அடையாளச் சின்னமாகவே ஆகிவிட்டது.

- பி. ராஜசேகரன், மதுரை

* நல்ல ஆரோக்கியமான மனிதர் ஒருவர் ஓய்வில் இருக்கும்போது நிமிடத் திற்கு 20 முறை மூச்சுவிடுவார்.
* உலகின் தண்ணீர் தேவையில் 80 சதவிகிதத்தை விவசாயம் எடுத்துக் கொள்கிறது.
* ஆரஞ்சுப் பழம் அதிகம் விளையும் இடம் நாக்பூர். இது மகாராஷ்டிராவில் உள்ளது.
* இந்தியாவில் உருளைக் கிழங்குக் கென தனி ஆராய்ச்சி நிலையம் உள்ளது.
* இந்தியாவில் விளையும் பொருட் களிலேயே மிக அதிக விலை விற்பது குங்குமப் பூ. இதன் விலை ஒரு கிலோ 36000 ரூபாய்.
* பூமியில் அதிகபட்சமாக 13 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தோண்டியுள்ளனர். முழுமையாக தோண்டவேண்டுமானால் 6000 கிலோ மீட்டர் வரை செல்ல வேண்டும். இது நடக்காது. காரணம், குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் பூமி அக்னிக் குழம்பாக உள்ளது.

- வி.ஆர். கிருத்திகா, திருச்சி


நாம் தீபாவளி பண்டிகையின்போது பட்டாசு கொளுத்தி கொண்டாடுவது போல இங்கிலாந்து மக்கள் ஆண்டு தோறும் நவம்பர் 5ந் தேதி மத்தாப்பு, வாணங்களைக் கொளுத்தி மகிழ்கிறார் கள். இதை கைஃபாக்ஸ் தினம் என்று அழைக்கிறார்கள். மன்னரைக் கொல்ல கைஃபாக்ஸ் என்பவன் வெடி மருந்தைக் கொண்டு சதி செய் தான். தக்க தருணத் தில் இவனது சதிச் செயல் கண்டுபிடிக்கப் பட்டது. மன்னர் பிழைத்தார். இதைக் கொண்டாடவே கைஃபாக்ஸ் போல கொடும்பாவிகள் செய்து வாணவெடி வெடித்துக் கொண்டாடுகின்றனர் இங்கிலாந்து மக்கள்.



- ஆறுபாதி புகழேந்தி.

கடலாகக்

முயல்களில் சுமார் 50 வகைகள் உள்ளன. இவற்றிற்கு மிக நீளமான காதுகள் இருப்பதற்குக் காரணம் மிக மெல்லிய சத்தம்கூட தெளிவாகக்



கேட்பதற்குத்தான். இவை மிகவும் வாசனை உணர்ச்சி உள்ளவை. சுமார் மணிக்கு 65 கி.மீ. வேகம் வரை ஓடக் கூடியவை. புல், காய்கறிகளை அதிகமாக உண்பதால் இவை அதிகமாக நீர் குடிப்பதில்லை. இவற்றின் தாயகம் வட அமெரிக்கா ஆகும்.

- பாலாஜி, ஸ்ரீசக்தி மெட்ரிக் பள்ளி, செட்டிபாளையம்

* ஈ ஒரே நிமிடத்தில் 20,000 தடவை இறக்கையை அடித்துப் பறக்கிறது.
* நத்தைக்கு மொத்தம் 14,000 பற்கள் உள்ளன.

கருதப்பட்ட நுனை!



* ஒட்டகங்கள் சுத்தமான நீரைக் குடித்தால் ஒரு விதக் கிறுகிறுப்பு வந்து மயங்கிவிடும். அது உப்பு நீரையே விரும்பிக் குடிக்கும்.

* பிறந்து ஒரு வருடமே ஆன திமிங்கிலம் தன் தாயைப் போல பெரியதாக இருக்கும்.

* டிரங்க் ஃபிஷ் என்ற வகை மீன் சாப்பிடும்முன் தனது உணவைக் கழுவி விட்டே சாப்பிடுகிறது.

* சில வகையான எட்டுக்கால் பூச்சிகளுக்கு எட்டுக் கண்களும் உண்டு.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.



யானைக்கு ஒரு தனிக் குணமுண்டு. காட்டு யானைகள் எந்த விலங்கையாவது சண்டையிட்டாலோ அல்லது கொன்றுவிட்டாலோ உடனடியாக ஆற்றுக்குச் சென்று குளித்துவிட்டு பின்புதான் உணவு சாப்பிடும். எல்லா யானைகளும் கிட்டப் பார்வை கொண்டவையே. தூரத்தில் உள்ள காட்சிகள் தெளிவாகத் தெரியாது. யானைக்கு வெள்ளை நிறம் பிடிப்பதில்லை. யானை மூச்சுவிடுவது துதிக்கையின் மூலம் தான். ஆனால் வாயினாலேயே மணத்தை அறிந்து கொள்கிறது. ஏனெனில் வாயிலேயே இதற்கு மணம் அறியும் நரம்புகள் உள்ளன.


- தேனி முருகேசன், தேனி



காங்காருக் குட்டிகள் தாயின் மடிப்பையிலேயே இருந்த போதிலும், தாய்ப் பாலைப் பருகத் தெரியாது. தாய் கங்காரு அசையும் போது அதன் மடியும் அசைந்து குட்டியின் முகத்தில் பாலைப் பொழியும். இப்படியே கங்காரு குட்டிகள் பாலைப் பருகுகின்றன.

- நா. பாண்டியம்மாள், 9ம் வகுப்பு, சேது மாணிக்கம் உயர்நிலைப்பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்.


பென்குவின் பறவைக்கு நாக்கில் சிறு சிறு முட்கள் போன்ற அமைப்புகள்



இருக்கும். இவ்வகையான முட்கள் இல்லாவிட்டால் பென்குவின்கள் இறந்து போக நேரிடும். ஏனென்றால் பனிப் பிரதேசத்தில் வாழும் மீன்கள் மிகவும் வழுவழுப்பானவை. இவற்றைப் பிடிப்பதற்கு இந்த முட்களே உதவுகின்றன. முட்கள் இல்லாவிட்டால் மீன்களைப் பிடிக்க முடியாமல் பென்குவின் பசியில் இறந்துவிடும்.


- பெ. நடராசன், 9ம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்

எகிப்தியர்கள் பூனையைக் கடவுளாக வழிபட்டார்கள் பூனையைக் கொன்றால், மரண தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால் ஐரோப்பாவில் பூனையைச் சாத்தானின் தோழன் என்று அழைக்கிறார்கள்.



14ஆம் லூயி காலத்தில் பிரான்ஸ் நாட்டில் 'துறவிகள் தினம்' கொண்டாடும் போது பூனைகளை உயிருடன் எரிப்பது வழக்கமாக இருந்தது. அமெரிக்க காடுகளில் வாழும் பெரிய வகைப் பூனைகள் 'பூமா' என்று அழைக்கப்படுகின்றன. இது வேகமாக மரம் ஏறக் கூடியது பெரிய மானைக்கூட கழுத்தைப் பிடித்துக் கடித்துக் கொன்றுவிடும்.


உலகிலேயே பெரிய தீவு. ஆஸ்திரேலியா. உலகிலேயே சிறிய கண்டம் ஆஸ்திரேலியா. இதன் மொத்தப் பரப்பு 80 லட்சம் சதுர கிலோ மீட்டர்கள். உலகிலேயே மிகவும் சிறப்பான முன்னேற்ற



மடைந்த நாடுகளுள் ஒன்று இது. ஆனால் இதன் பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு பாலைவனம். இங்குதான் உலகில் மிகவும் விசித்திரமான பிராணிகள் உள்ளன. கங்காரு, கறுப்பு அன்னம், பல வகை முயலினங்கள் மற்றும் டங்ஸ்டன், மங்கனீசு, கோபால்ட், துத்தநாகம் ஆகிய கனிமங்கள் மிகுந்துள்ளன.

- ஆர்.ஏ. ஜெயந்த் பாலாஜி, ஸ்ரீசக்தி மெட்ரிக் பள்ளி, செட்டிபாளையம்.

ஆப்பிரிக்காவில் 'போப்பாப்' என்று ஒரு வகை மரம் உள்ளது. இந்த மரத்துக்குத் 'தலைகீழ்' என்று ஒரு பெயர் உண்டு. ஏனெனில் இந்த மரம் பார்ப்பதற்குத் தலைகீழாக இருப்பது போலத் தோன்றும். வேர்களைப் போல தோற்றமளிக்கும் இந்த மரத்தின் கிளைகள் 130 அடி தூரம் வரை கூட வளர்வதுண்டு.



- ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்

எரிமலைக் குழம்புகளாலேயே உருவாக்கப்பட்ட மலை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள 'வையாமிங்' என்னுமிடத்தில் உள்ளது. எரிமலைக் குழம்பு குளிர்ச்சி அடைந்ததால் இம்மலை உருவானது. இம்மலையைச் சுற்றிக் காணப்பட்ட வண்டல் மண் படுகைகளைக் காற்றும், நீரும் அரித்து,தங்கள் கை வண்ணத்தால் இந்த வானுயர லிங்க வடிவ மலையை உருவாக்கின. இம்மலையின் உயரம் 865 அடி. இம்மலை 'பெல்லி ஃபோர்க்கி' ஆற்றின் சமவெளியில் உள் ளது. 1906ம் ஆண்டு முதல் இம்மலை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. இம்மலையைப் பேய் மலை என்றும் அழைக்கிறார்கள்.

- பி. ருக்மணி, சிதம்பரம்

பள்ளிகளுக்கு ஏற்ற மேடை நாடகங்கள் - எஸ்.லீலா - பக்.140 - ரூ.30 - தமிழ் மணி நிலையம், 9, எஸ்.எஸ்.சாஹிப் தெரு, அமைந்தகரை, சென்னை - 600 029.

பள்ளி மேடைக்கேற்ற நாடகங்களின் தொகுப்பு. ஒவ்வொன்றும் ஒரு வகை. 'வேண்டாம் பொய்' கூடா நட்பின் விளைவையும், சுத்தம் சுற்றுப் புறத்தில் பேண வேண்டிய அடிப்படை சுகாதாரம் அதற்குக் கிடைக்கும் வரவேற்பையும் கூறுகிறது. 'போரும் அமைதியும்' தோழமையின் அவசியத்தையும், கல்வியின் அவசியத்தையும் மற்ற நற்பண்புகளையும் வலியுறுத்துகின்றது. நகைச்சுவையும் உண்டு. சிறுவர் இலக்கியத்தில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு மிகக் குறைவே. சிறுவர் இலக்கியத்தில் நாடகப் பிரிவில் போதிய வளர்ச்சியில்லை என்ற குறையை இந்நூல் தீர்த்து வைக்கிறது.

கதைச் சக்ரவர்த்தி கல்கி - வி.ர.வசந்தன் - பக். 172 - ரூ.35 - வானதி பதிப்பகம், சென்னை - 17

இந்த நூல் பல சிறப்புகளையுடையது. சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட கல்கியவர்களின் வாழ்க்கை + சாதனைகளைச் சிறுவருக்கான வகையில் தந்துள்ளது. கல்கியவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவை அடுத்து வந்துள்ளது. ஏவிஎம் அறக்கட்டளையின் வெள்ளிப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். ஆசிரியரே படங்களை வரைந்துள்ளார். அருமையான புத்தகம்.

இந்தியச் செயற்கைக் கோள்கள் - நா.ரா. பண்டரிநாதன் - பக்.108 - ரூ.23 - தமிழ் மணி நிலையம், 7, எஸ்.எஸ். சாஹிப் தெரு, அமைந்தகரை, சென்னை - 600 029.

இந்தியா மேலை நாடுகளுக்குச் சவால் விடுக்கும் அளவுக்கு 1975ஆம் ஆண்டிலிருந்து ஏராளமான செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி வருவதை அவ்வப்போது செய்தித்தாள்களில் படித்து வருகிறோம். 2000மாவது ஆண்டின் மார்ச் 20ஆம் நாள் செலுத்தப்பட்ட இன்ஸாட் 3 பி இந்தியாவின் 30ஆவது செயற்கைக் கோள். இந்த 30 செயற்கைக்கோள்களின் எல்லா விவரங்களும் அவற்றின் சிறப்பு பணிகள் யாவும் சுவையாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. நூலைப் முடித்ததும் நம் நாட்டு விஞ்ஞானிகளின் சாதனைகளை எண்ணிப் பெருமிதப்படலாம். வினாடி வினா நடத்துவோருக்கு ஏராளமான விவரங்கள் உள்ளன. வான்வெளி இயலுக்குப் பெருமை சேர்க்கும் நூல். படங்கள் இருந்திருந்தால் கூடுதல் சிறப்பு.



கடி ஜோக்ஸ் 500 - அழகுசங்கர் - பக்.96 - ரூ.20 - அழகு பதிப்பகம், 20, ஆசிரியர் குடியிருப்பு, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 49.

சிறுவர்கள் படித்து ரசித்து சிரிப்பதற்கேற்றதாக இதில் 500 கடி ஜோக்ஸ் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இதோ மாதிரிக்கு இரண்டு:

யார் நல்லா மரம் ஏறுவாங்க?

"நம்ம கிரிக்கெட் வீரர்களை மரம் ஏறச் சொன்னால் யார் முதல்ல ஏறுவாங்க?"

" 'அணில்' கும்ளேதான்!"

"தீபாவளிக்கும் பொங்கலுக்கும் என்ன வித்தியாசம்?"

"தெரியலையே?"

"தீபாவளியன்று பொங்கல் வைக்கலாம். ஆனால், பொங்கலன்று தீபாவளி வைக்க முடியாதே!"

- ரே

"ஏப்பா கோவிந்தா... நான் காசி, ராமேஸ்வரம் போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்குப் போகிறபோது உன்னிடம் பத்திரமா வச்சுக்கச் சொல்லி, தங்க நகைகள் கொடுத்தேனே... அதெல்லாம் தர்றியா...!"

"அய்யய்யோ... நான் எதைச் சொல்வேன். நீங்க கொடுத்த தங்க நகையெல்லாம் கறையான் தின்று விட்டதுங்க...!" என்று பாசாங்குத் தனமாய் அழுது கொண்டே தலை, தலையாய் அடித்துக் கொண்டு முதலைக் கண்ணீர் வடித்தான் கோவிந்தன்.

"அடப்பாவி... உன்னை நம்பித்தானே நான் இருந்த நகைகளையெல்லாம் கொடுத்தேன். இப்போ அந்த நகைகளைக் கறையான் தின்றதாகப் பச்சைப் பொய் சொல்கிறாயே... தங்கத்தை எப்படி கறையான் திங்கும். யாருமே நம்ப முடியாத பொய்யைச் சொல்கிறாயே... இது நியாயமா...?" என்று கவலையும் கோபமும் கலந்த குரலில் ராம்லால் சேட்ஜி கத்தினார்.

"நான் என்ன செய்யட்டும்? கடவுள் சத்தியமா சொல்றேன். உங்க நகையை எல்லாம் கறையான்தான் தின்றுவிட்டது. எந்தக் கோயிலுக்கு நீங்க கூப்பிட்டாலும் சரி... நான் வந்து சத்தியம் செய்கிறேன்" என்றான் கோவிந்தன்.

"டே, கோவிந்தா.... உன் பேருக்குத் தகுந்தபடி நீ எனக்குக் கோவிந்தா போடப் பார்க்கிறாயா? உன்னைச் சும்மா விட மாட்டேன்" — ராம்லால் அவன் மீது கோபக்கனல் பொங்கப் பேசினார்.

உடனே ராம்லால் சேட் அவ்வூர் நீதிபதியிடம் சென்று நடந்ததைக் கூறி எப்படியாவது அந்த நகைகளை வாங்கிக் கொடுக்குமாறு முறையிட்டார்.

"சேட்ஜி! நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவன் என்ன தொழில் செய்கிறான்?" என்று கேட்டார் நீதிபதி.


"அவன் ஐந்தாறு மாடுகளை வைத்துப் பால் வியாபாரம் செய்துகொண்டு இருக்கிறானுங்க...!" — ராம்லால் சேட்.

அப்படியா... சரி... அவனுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும். நான் சொல்கிறபடி செய்றீங்களா?" என்றார் நீதிபதி.

"நான் என்ன செய்யணும்? சொல்லுங்

நகைகளைத் தின்ற





கள்... செய்கிறேன்."

சேட்ஜியிடம் நீதிபதி ரகசியமாக ஏதோ சொன்னார்.

"நீங்க சொன்னபடியே கட்டாயமாக நான் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு சேட்ஜி நீதிபதியிடம் விடை பெற்றார்.

கரையான்!

காரமடை துரை. முருகேசன்

மறுநாள்.

ராம்லால் சேட்ஜி வீட்டு முன் கோவிந்தனுடைய ஐந்து மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. இதுதான் நல்ல சமயம் என்று சேட்ஜி மெதுவாக வந்து மாடுகளைப் பிடித்துக்கொண்டு போய் ரகசியமாக ஒருபக்கம் கட்டி வைத்து விட்டார்.

மாடுகளைக் காணாத கோவிந்தன் ஊர் முழுவதும் தேடிப் பார்த்தான். எங்கு தேடியும் பயனில்லை. அவன் சோகத்தோடு சோர்ந்து போய் வீடு வந்து சேர்ந்தான்.

கோவிந்தன் மாடுகளைக் காணாமல் கவலையோடு இருப்பதை சேட்ஜி பார்த்தார்.

"கோவிந்தா! ஏன் இப்படி உன் முகம் வாடியிருக்கிறது? நான் கொடுத்த தங்கம் காணாமல் போச்சேனு வருத்தமா?"

"இல்லை சேட்ஜி! நான் பாசத்தோடு வளர்த்து வந்த பசுமாடுகளைக் காணோம்...!"

"பசுமாடா... இரண்டு நாட்களுக்கு முன் அந்த மாடுகளை நான் பார்த்தேன்..."

"பார்த்தீங்களா... இப்ப அந்த மாடுகள் எங்கே சேட்ஜி ?"

"நான்தான் அந்த மாடுகளைப் பிடித்து


ஜோக்ஸ் கார்னர்



''உனக்கு எத்தனை ராகம் தெரியும்?''

''ராகம் எப்படி கண்ணுக்குத் தெரியும்?''

— சாயம் வெ. ராஜாராமன்



''உங்க விட்டுக்கு டெலிபோன் பில் ரெண்டு மாசத்துக்கு எவ்வளவு வரும்?''

''ஒரே ஒரு பில்தான் வரும்!''

– எம். வினோத்



''ஏண்டா அழறே?''

''ஸ்டாண்டு மேல் இருந்த கடிகாரத்தைக் கீழே தள்ளி உடைச்சுட்டேன். தெரிந்தால் நீங்க அடிப்பீங்கன்னுதான்!''

– கே. ராஜேந்திரன்

வீட்டில் கட்டி வச்சிருந்தேன்...''

''அப்பாடா, ரொம்ப சந்தோஷம். அந்த மாடுகளைக் கொடுக்கிறீர்களா...?''

''அய்யய்யோ... நான் என்ன சொல்வேன். மாடுகளைக் கறையான் தின்றுவிட்டதே... நான் என்ன செய்யட்டும்?'' கிண்டலாகப் பதிலளித்தார் சேட்ஜி...

''என்ன கறையானா? மாடுகளைத் தின்று விட்டதா... எதற்கு சேட்ஜி இப்படி பச்சையாப் பொய் சொல்றீங்க...''

''நான் என்ன செய்யட்டும். உன்னுடைய மாடுகளை எல்லாம் கறையான்தான் தின்றுவிட்டது. எந்தக் கோயிலுக்குக் கூப்பிட்டாலும் சரி... நான் வந்து சத்தியம் செய்கிறேன்'' என்று கோவிந்தன் சொன்ன பதிலையே திருப்பி பதிலடியாகச் சொன்னார் சேட்ஜி.

கோவிந்தனுக்கு ரத்தம் கொதித்தது. ''அப்படியா? உங்களை நான் சும்மா விட மாட்டேன்'' என்று கோபத்தில் கொக்கரித்தான் கோவிந்தன். நீதிபதியிடம் ஓடி வந்தான். ''ஐயோ! எசமானே... இந்த அநியாயத்தைக் கேளுங்க. என்னுடைய மாடுகளை சேட்ஜி திருட்டுத்தனமா பிடித்துக்கொண்டு ஒளித்து வைத்துவிட்டு, என்னிடம் இல்லை. அதைக் கறையான் தின்றுவிட்டது என்று என்னை ஏமாற்றுகிறார். நீங்கள் அந்த சேட்ஜியை விசாரித்து எனக்கு நீதி வழங்க வேண்டும்'' என்று அழாத குறையாகக் கெஞ்சினான்.

நீதிபதி லேசாகப் புன்னகை புரிந்தார்.

''ஏன் கோவிந்தா, தங்கத்தைத் தின்ற கறையானே இந்த மாடுகளையும் ஏன் தின்று இருக்கக் கூடாதா? என்று கேட்டார் நீதிபதி.

வேறு வழியில்லாமல் கோவிந்தன் உண்மையை ஒத்துக்கொண்டான். நகைகள் ராம்லால் கைக்கு வந்து சேர்ந்தன. கோவிந்தன் மாடுகளை ஓட்டிக் கொண்டு சென்றான்.

குறுக்கெழுத்துப் புதிர்


இடமிருந்து வலம்

1. உலக வர்த்தக மையக் கட்டடம் இடிக்கப்பட்ட இடம் (5)

9. உண்மைக்கு எதிர்ச்சொல் (2)

10. அவசரச் செய்திகளை விரைவாக அனுப்பும் இது (3)

13. ஆற்றங்கரையோரம் வளர்ந்திருக்கும் இந்தத் தாவரம் (3)





வலமிருந்து இடம்

3. நீர் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

4. செருப்பு அணிவது இதுக்கு நல்லது (3)

5. இந்தக் காய் குடுவை போல் காய்க்கும் (2)

6. வழி (2)

8. சினிமா இதில் காட்டப்படும் (2)

15. நரசிம்மவர்மர் சாளுக்கிய மன்னன் ______ யை போரில் கொன்றார் (5)

மேலிருந்து கீழ்

1. தூக்கம் (4)

2. பார்வதியின் தந்தை ______ நடத்தும்போது சிவபெருமானை அழைக்கவில்லை (3)

3. டோக்கியோ இந் நாட்டின் தலைநகரம் (4)

12. அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் ஜான் கூட்டன் ______ (3)

கீழிருந்து மேல்

6. தாய்லாந்தின் தலைநகரம் (4)

7. 30 நாட்கள் கொண்டது ஒரு ______ (3)

11. நம் நாட்டுப் பாராளுமன்றம் இங்குள்ளது (3)

13. தினசரி செய்திகளைத் தருவது (4)

14. தமிழ் வருடத்தின் முதல் மாதம் (4)


15. இரண்டு வகை நிலங்களுள் ஒன்று நன்செய், மற்றொன்று ______ (4)

— பி. கார்த்திகா, சென்னை

விடை 64 ஆம் பக்கம்

ஆந்தைகள்

ஆழி




ஆந்தைகளில் 4 வகைகள் இருக்கின்றன. ஆனாலும் சுமார் 200 உட்பிரிவுகள் உள்ளன.




ஆந்தைகள் 'புலால் உண்ணிகள். உணவு: எலி, பல்லி, நண்டு, மீன். செரிக்க முடியாத எலும்புகளை வாயினால் உமிழ்ந்து விடும் இவை.



வட அமெரிக்காவில் தான் 93 செ.மீ. உயரம் உள்ள மிகப்பெரிய ஆந்தையும், 15 செ.மீ. உயரம் உள்ள மிகச் சிறிய ஆந்தையும் இருக்கின்றன.



பெரிய பழுப்பு ஆந்தை, ஆட்டுக்குட்டிகளையும் நாய்க்குட்டிகளையும் கூடக் கொன்று தின்றுவிடும்!




ஆந்தைகள், பகலில் இருண்ட இடங்களில் பதுங்கியிருந்து இரவில்தான் இரை தேட வெளியே கிளம்பும்.




ஆந்தை தன் கால்விரல்களை முன்னாலோ, பின்னாலோ, பக்கத்திலோ— எப்படி வேண்டுமானாலும் திருப்பிக் கொள்ளும். வேறு எந்தப் பறவையாலும் இப்படிச் செய்ய முடியாது!




ஆந்தையின் இறகுகள் மென்மையாக மெத்தென்று இருக்கும். அதனால் இது பறக்கும் போது கொஞ்சங்கூட சத்தம் கேட்பதில்லை. ஒரு சில இனங்களில் கால்களிலும் இறகுகள் முளைத்திருக்கும்!



ஆந்தையின் கண்கள் மிகப் பெரியவை. பறவைகளில் ஆந்தை மட்டுமே மனிதர்களைப் போல் இமைகளை மேலிருந்து கீழாகச் சிமிட்டுகிறது. மற்ற பறவைகளைப் போல் அல்லாமல், இதன் கண்கள் இரண்டும் மனிதர்களைப் போல் முன்பக்கமாகவே இருக்கின்றன!



ஆந்தையால் ஒவ்வொரு விழியாலும் ஒவ்வொரு திசையில் பார்க்க முடியும்! இது ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டு தலையை மட்டும் எல்லா திசைகளிலும் — பின் பக்கத்திலும் — திருப்ப முடியும்! இருட்டிலும் தெளிவாகப் பார்க்கும்.




புறவைகளில் மிகவும் மெதுவாகப் பறப்பது ஆந்தை தான். இது பறக்கும் வேகம் மணிக்கு 32 கி.மீ.தான்!

'பார்ன்' ஆந்தை (கோட்டான்) தூங்கும் போது, இறக்கைகளை விரித்து வைத்துக் கொண்டே தூங்கும். உடனடியாகப் பறந்து தப்பிக்கவே அப்படி!




ஆந்தைகள் சொந்தமாகக் கூடு கட்டிக்கொள்வதில்லை. அவை மரப் பொந்துகளை, அல்லது மற்ற பறவைகள் வேண்டாம் என்று விட்டுச் சென்ற பழைய கூடுகளைச் சொந்தமாக்கிக் கொள்கின்றன!






ஆந்தையின் முட்டை மற்ற பறவைகளின் முட்டைகள் போல் இருக்காது; உருண்டையாக இருக்கும்!




ஆந்தைகள் அடைகாப்பதில், ஆணும் பெண்ணும் சமம்தான். ஆண் ஆந்தையும் பெண் ஆந்தையும் ஒன்றாக உட்கார்ந்து ஒரே சமயத்தில் அடைகாக்கின்றன!



ஆந்தைக் குஞ்சுகளுக்குப் பசி வந்துவிட்டால் தாங்காது. கூட்டில் இருக்கும் பெரிய குஞ்சுகள், சிறிய குஞ்சுகளைக் கொன்று தின்று விடும்!



ஸ்காட்லாந்தில், ஓர் ஆந்தைக்கு வலக்கண்ணில் அடிபட்டுப் பார்வை போய்விட்டது. அதை வளர்த்த 'பறவைகள் காப்பகத்தினர்' பொது மக்களிடம் நிதி திரட்டி, அடி பட்ட கண்ணில் 'காண்டாக்ட் லென்ஸ்' பொருத்தி சிகிச்சை செய்தார்கள்! இப்போது இந்த ஆந்தைக்கு இரண்டு கண்களும் நன்றாகத் தெரிகின்றன!



ஆந்தைக்கு 'ராட்டில்' என்னும் கிலுக்குப் பாம்பின் குட்டி என்றால் பிடிக்கும். அதைக் கொன்று தின்று விடும். ராட்டில் பாம்புக்கு ஆந்தைக் குஞ்சு என்றால் பிடிக்கும்; கொன்று தின்றுவிடும்! பழிக்குப் பழி!



கிரேக்கர்கள் ஆந்தைதான் உலகிலேயே மிகவும் புத்திசாலியான பறவை என்று கருதினார்கள். இதை அறிவுக் கடவுளாகவே எண்ணி வழிபட்டார்கள். நாணயங்களிலும் அச்சிட்டார்கள்.



கேட்கட்டுமா டாக்டர்?

மாறுகண் அதிர்ஷ்டமா?

● அன்பு செல்வக்குமார், சேலம்

? நாடித்துடிப்பு என்பது என்ன? அதைத் தெரிந்து கொள்ள மணிக்கட்டைப் பிடித்துப் பார்ப்பது ஏன்?

! நம் இதயம் ஒரு முறை சுருங்கி விரிவதை 'இதயத் துடிப்பு' என்கிறோம். இவ்வாறு இதயம் ஒவ்வொரு முறை துடிக்கும்போதும் ஒருவித அழுத்தத்துடன் ரத்தத்தை மகாதமனி எனும் தமனி நாளத்தில் செலுத்துகிறது. இது பல கிளைகளாகப் பிரிந்து உடலெங்கும் செல்கிறது. இதயத்தின் துடிப்பினால் ரத்தம் தமனிகள் வழியாக 'குபுக் குபுக்' என்று இதயத்துடிப்பின் வேகத்திலேயே செல்கிறது. தமனிகளின் மேல் விரல்களை வைத்து அதில் ரத்தம் செல்வதை உணரலாம். இதயத்தின் துடிப்பு வேகத்தையும் உணரலாம். இதுதான் நாடித்துடிப்பு. கைகளின் மணிக்கட்டில், கழுத்தின் பக்கவாட்டில், தொடையிடுக்குகளில், முழங்கால் மற்றும் கணுக்கால் ஆகிய பகுதிகளில் உள்ள தமனி நாளங்களின்மீது விரல்களை அழுத்தமாக வைத்தால் நாடித் துடிப்பை உணர இயலும்.

இதயத்துடிப்பும் நாடித் துடிப்பும் எண்ணிக்கையில் ஒன்றுதான். ஆகவே நாடித்துடிப்பை அளந்து இதயத்துடிப்பின் தன்மையை மருத்துவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். மணிக்கட்டில் கட்டை விரலுக்குக் கீழே 'ஆரத்தமனி' (ரேடியல் ஆர்ட்டரி) செல்கிறது. நாடித் துடிப்பை அறிய இந்த நாளத்தைத்தான் மருத்துவர்கள் மிக அதிகமாகப் பயன்படுத்துவார்கள்.

● ம. மயில்வாகனன், பம்மல்

? 'பேஸ் மேக்கர்' என்பது என்ன?

! பேஸ் மேக்கர் என்பது இதயத்துடிப்பை முறைப்படுத்துவதற்குப் பயன்படும் ஒரு கருவி. நம் இதயம் நிமிடத்திற்கு சராசரியாக 60 முதல் 90 முறை வரை துடிக்கும். இது ஏதோ ஒரு காரணத்தால் குறைவாகத் துடிக்கலாம். நிமிடத்திற்கு 48 முறைக்கும் குறைவாகத் துடிக்கும்போது மயக்கம், சோர்வு, நெஞ்சு படபடப்பு ஆகிய அறிகுறிகள் ஏற்படும். அப்போது இதயத்துடிப்பை முறைப்படுத்த பேஸ் மேக்கர் பயன்படுகிறது.


இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. 1. மின்விசையைத் தரும் பகுதி 2. மின் இணைப்பு வயர்.



டாக்டர் கு. கணேசன்

மின்விசையை உற்பத்தி செய்யும் பகுதியில் ஒரு பேட்டரி இருக்கும். இது மின் தூண்டல்களை ஏற்படுத்தும். இதிலிருந்து மின் இணைப்பு வயர் கிளம்பும். இந்தக் கருவி மிகச் சிறியது. 5 செ.மீ. அகலமும், ஒரு செ.மீ. கனமும், 30 கிராம் எடையும் இருக்கும். பல வடிவங்களில் இது கிடைக்கிறது. இக்கருவியை நோயாளியின் தேவைக்கேற்ப தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் உடலில் பொருத்திக் கொள்ளலாம். தற்காலிகக் கருவி உடலின் வெளிப்பக்கத்தில் இருக்கும். அதிலிருந்து புறப்படும் மின் இணைப்பு வயரை காரையடிச்சிரை வழியாகவோ, தொடைச்சிரை வழியாகவோ இதயத்திற்குச் செலுத்துவார்கள். கருவியிலிருந்து புறப்படும் மின்தூண்டல் இதயத் துடிப்பைச் சரிப்படுத்தும். நிரந்தரக் கருவியை மார்பின் மேற்புறத்தில், காரை எலும்பிற்கு அருகில், சிறிய அறுவை சிகிச்சை செய்து அதிக ஆழம் இல்லாதபடி புதைத்து, தோலைத் தையல் போட்டு மூடி விடுவார்கள். மின் இணைப்பு வயரைக் கழுத்துச்சிரை வழியாக இதயத்திற்குள் செலுத்தி, இதயத் தசைகளின்மீது நன்றாகப்படும்படி இணைப்பார்கள். பேஸ் மேக்கர் ஒரு கடிகாரத்தைப் போல் இயங்குகிறது. இதில் இதயம் எத்தனை முறை துடிக்க வேண்டும் என முறைப்படுத்தப்பட்டிருக்கும். கருவி இயங்கத் துவங்கியதும், குறிப்பிட்ட இடைவெளியில் மின்தூண்டல் கிளம்பி இதயத்தை அடையும். இதனால் இதயம் துடிக்கும். பேஸ் மேக்கரிலிருந்து மின் தூண்டல் குறிப்பிட்ட அளவில் இதயத்திற்குச் சென்று கொண்டே இருப்பதால் இதயம் தொடர்ந்து துடிக்கிறது.

நோயாளியின் தேவைக்கேற்ப இதயத்துடிப்பின் வேகத்தை வெளியிலிருந்தே மாற்றியமைக்கவும் இக் கருவியில் வசதியுள்ளது. இதன் மூலம் நோயாளிக்கு எப்போதும் இதயத்துடிப்புத்தடை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும். ஒருமுறை பொருத்தப்படும் கருவி குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு நல்ல நிலைமையில் இயங்கும். அதற்குப் பிறகு புதிய கருவியைப் பொருத்திக் கொள்ள வேண்டும்.




● பேஸ் மேக்கர் கருவி

● **சு. இரத்தினம், கோட்டூர்**

? மாறுகண் இருந்தால் அதிர்ஷ்டமா?

! மாறுகண் என்பது கண்ணில் உள்ள நோயைக் குறிப்பது. இது அதிர்ஷ்டமில்லை. கண் தசைகளில் உள்ள குறைபாடு காரணமாக இது ஏற்படுகிறது. கருவிழியின் ஏதேனும் ஒரு பக்கத்தசை சரியாக செயல்படாததால், எதிர்பக்கத்தில் நன்றாகச் செயல்படும் கண் தசையை நோக்கிக் கருவிழி திரும்பி விடுவதால் 'மாறுகண்' எனப்படுகிறது. இது பெரும்பாலும் குழந்தைகளுக்குத்தான் ஏற்படுகிறது. ஐந்து வயது ஆவதற்குள் மாறுகண்ணைச் சரி செய்வதே நல்லது. சொட்டு மருந்துகள், கண்ணாடி, கண் பயிற்சிகள், அறுவை சிகிச்சை ஆகியவை மூலம் இதனைச் சரி செய்ய இயலும். முறையான சிகிச்சை பெறத் தாமதமானால் நிரந்தரப் பார்வை இழப்பை இது ஏற்படுத்தி விடும். அதற்குப் பின்பு சிகிச்சை பெற்றால் அவ்வளவாகப் பலன் இருக்காது. ஆகவே, மாறுகண்ணை அதிர்ஷ்டம் என்று நம்பி பார்வையை இழந்துவிடக் கூடாது.

குறுக்கெழுத்துப் புதிர் விடை





புதிர் உலக விடைகள்

I. முதலில் 5 லிட்டர் கேனில் உள்ள 5 லிட்டர் பாலை காலியாக உள்ள 10 லிட்டர் கேனிலும், 3 லிட்டர் கேனில் உள்ள 3 லிட்டர் பாலை 5 லிட்டர் கேனிலும் ஊற்ற வேண்டும்.

பின்னர் 10 லிட்டர் கேனில் உள்ள 5 லிட்டர் பாலை, காலியாக உள்ள 3 லிட்டர் கேனில் 3 லிட்டர் மட்டும் ஊற்றி விட்டு மீதமுள்ள 2 லிட்டர் பாலை 10 லிட்டர் கேனிலேயே வைத்துவிட வேண்டும்.

இப்பொழுது 10 லிட்டர் கேனில் 2 லிட்டர் பாலும், 5 லிட்டர் கேனில் 3 லிட்டர் பாலும், 3 லிட்டர் கேனில் 3 லிட்டர் பாலும் இருக்கும்.

இறுதியாக 3 லிட்டர் கேனில் உள்ள 3 லிட்டர் பாலை, 5 லிட்டர் கேனில் உள்ள 3 லிட்டர் பாலுடன் 2 லிட்டர் மட்டும் ஊற்றிவிட்டு, நிறுத்திக் கொண்டால், 3 லிட்டர் கேனில் 1 லிட்டர் பால் மட்டுமே இருக்கும்.

II. 2 ஆண்கள், 3 பெண்கள்

III.

முதலாம் பொருளின் விலை	ரூ.15
இரண்டாம் பொருளின் விலை	ரூ.45
மூன்றாம் பொருளின் விலை	ரூ.30
நான்காம் பொருளின் விலை	ரூ.20
ஐந்தாம் பொருளின் விலை	ரூ.15
	ரூ.125

IV. அ) பாப்பா ஆ) காக்கா இ) பீப்பீ ஈ) டாடா

ஒற்றுமை : வலமிருந்து இடமாக, இடமிருந்து வலமாகப் படித்தாலும் ஒரே மாதிரிதான் வரும்.

V. 1. கேரளா 2. முகமது அலி 3. துருக்கி 4. ஈஸ்ட் 5. பாஸ்கரா 6. கரியப்பா.

GOKULAM ANSWERS...

- CAN RAGAS HELP TO INCREASE MEMORY POWER?
- WHICH IS THE LARGEST AND MOST POWERFUL CHURCH IN THE WORLD?
- WHERE DID PIZZAS FIRST ORIGINATE?
- WHICH INSECT DANCES TO COMMUNICATE?

AN INSIGHT INTO CARNATIC MUSIC

CHRISTMAS - SPECIAL PAGES

COVER STORY

IN THE WILD



LOST IN A FORT

- a new serial



HUMOUR CONTEST

- prize winning stories

GOKULAM

The monthly magazine for children

DECEMBER 2001

Rs.6/- ONLY

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097

1000 பொன் அல்லது 1000 கசையடி!

கதை : ஆர். சாரதா
படம் : மகேஸ்




மன்னா! என் பெயர் வீரன். நான் முயற்சி செய்கிறேன்.
வீரன் பூட்டைத் தொட்டதும் பூட்டு திறந்து கொண்டது.
மன்னா இந்தப் பூட்டு, பூட்டப்படவே யில்லை.
ஆமாம்! இதோ 1000 பொன் பரிசு!
??
எதற்கு மன்னா?
உன்னுடைய விடாமுயற்சிக்கு. மக்களே! உங்களில் யார் முயற்சி செய்கிறீர்கள் என்பதைப் பார்க்கத்தான் இதை அறிவித்தேன். முயற்சியே செய்யாமல் முடியாது என்ற முடிவுக்கு வரக்கூடாது.

தசைகள்





நாம் அனைவரும் நிற்கிறோம். நடக்கிறோம், ஓடுகிறோம், ஆடுகிறோம், உட்காருகிறோம், உண்ணுகிறோம், உடுத்துகிறோம். இச் செயல்கள் அனைத்தும் தசைகளின் இயக்கங்களினாலேயே நடை பெறுகின்றன. நம்மால் ஒரு நிமிடம் கூட தசைகளை இயக்காமல் இருக்க முடியாது. கண் இமைகள் மூடித்திறக்கின்றன. இதயம் துடித்து இயங்குகிறது. மூளை செயல்பட்டு நம்மை நினைக்க வைக்கிறது. இவை நடைபெறுவது தசைகளின் உதவியால்தான். நமக்கு மட்டுமல்ல, நம்மை விடச் சிறிய உயிரிகளான ஹைடிரா மண் புழு, நத்தை, கரப்பான், முட்தோலிகள், மீன், தவளை, பாம்பு, பறவை மற்றும் பாலூட்டிகள் அனைத்தின் செயல்பாடும், நகர்தலும் தசைகளால்தான். தசையின்றி அணுவும் அசையாது உயிரிகளில் என்பது தான் உண்மை. தசை என்பது உயிரிகளின் உடலில், இயக்கம் உண்டாக்க உதவும் உயிரணுத் தொகுதியாகும். பல செல்களின் தொகுப்பே தசை எனப்படுகிறது. அவற்றின் செயல்பாடு, உயிரிகளின் பரிணாம இடம் குறித்தும், வாழுமிடம் பொருட்டும் வேறுபடுகின்றன. தசைகளின் இணைப்பாலேயே உடல் உருவாகிறது.

உங்களின் மேல் தோலை அழுத்தினால், மெத், மெத்தென்று, மெத்தை போன்று உணர்வதுதான், உங்களின் சதைப் பகுதி. உங்கள் உடலின் எடையில் 40 சதம் தசைகளால் மட்டுமே ஆனது. உடல் முழுவதும் பலவகையான உருவங்களில் பலவித செயல்பாடுகளிலும் தசைகள் உள்ளன. உங்கள் உடலில் 400 சட்டகத் தசைகள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் உண்டு. உடலின் மிகப் பெரிய மற்றும் வலுவான தசை, உங்கள் முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடையில் உள்ள 'கெண்டை சதை' எனப்படும் 'ஆடு தசை' தான். அதற்கடுத்தது மேற்கையிலுள்ள இரு தலைத்தசை ஆகும்.


கை, கால்களிலுள்ள தசைகள் நீண்டு மெலிதாகவும்,

உடல் பாதுகாப்பு



மார்பு மற்றும் தோள்களிலுள்ள தசைகள் அகண்டதாகவும், விரல் மற்றும் முகத்திலுள்ள தசைகள், குட்டையாகவும் மெலிதாகவும் இருக்கும். தோலுக்கும் கீழுள்ள சதைப் பகுதிக்குக் கீழேயுள்ள, உங்களின் உட்பகுதி உறுப்புகளான நுரையீரல், இதயம், இரைப்பை, குடல் மற்றும் சிறுநீரகம் போன்றவையும் தசைகளால் ஆனவையே. தலை மற்றும் முகப்பகுதிகளில் சிறு சிறு தசைகள் உள்ளன. மென்மையான அசைவுகளை ஏற்படுத்துவதும் சிரிக்க, அழ, கோபிக்க, பயப்பட, அதிர்ச்சியடைய என நவரச பரிமாண உணர்ச்சிகளையும் உண்டாக்குபவை இவையே.

தசைகளை அவற்றின் செயல்பாட்டிற்கு ஏற்ப இயக்கு தசை, இயங்கு தசை மற்றும் இதயத்தசை என மூன்று வகையாகப் பிரிக்கலாம். கையை நீட்டி, உங்கள் தங்கையின் தலையில் ஒரு குட்டு, பாம்பைப் பார்த்து பயந்து ஓட்டம், கால்பந்து விளையாட காலை உந்தி ஓர் உதை பந்தின்மேல்... இவற்றைச் செய்பவை இயக்குதசைகள். உங்களின் விருப்பத்திற்கேற்ப, இவற்றை நீங்கள் இயக்கலாம். வயிறு நிறைய, 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டு சாப்பிட்டு விட்டு, சிறிது நேரம் கண்ணயருகிறீர்கள். உண்ட உணவைச் செரிமானம் செய்ய உங்களின் இரைப்பை, கணையம், பித்தப்பை மற்றும் சிறுகுடல் உங்களைக் கேட்டுக் கொண்டு இயங்குவதில்லை. இதயம் உங்களின் கட்டளைக்கேற்ப, இரத்தத்தை இறைப்பதோ, நுரையீரல் நீங்கள் சொன்னபடி காற்றை அனுப்புவதோ இல்லை. உடலின் தேவைக்கேற்ப, பாரம்பரியமாக அவை என்ன வேலை செய்ய வேண்டுமென ஜீன்களில் எழுதப்பட்டுள்ளதோ, அந்தந்த வேலையை, தானே இயங்கிச் செய்கின்றன. இவற்றையே இயங்குதசைகள் என்கிறோம். இவற்றை விட சிறப்பான செயல்பாடுகள் உள்ளவை இதயத் தசைகள்.



இயக்கு தசையை நுண்ணோக்கி மூலம் நோக்கினால், அவற்றினூடே குறுக்குவரிகள் தென்படுவதால், இவற்றை 'வரித்தசை' என்பர். இவையே மிகுதியாக சட்டகத்தின்மீது காணப்படுவதால், இவை 'சட்டகத்தசை' என்றும் அழைக்கப்படுகிறது. உங்களின் தசைகளில் சில நாடா போன்றும், சில நூற்கதிர் போல் நடுவில் பருத்து, நுனியில் மெலிதாகவும், சில

மோகனா

மெல்லிய தகடு போலவும் இருக்கும். வயிற்றுப் பகுதியில் தகடு போன்ற தசையும், கை, கால்களில் நூற்கதிர்போன்ற தசைகளும் காணப்படும்.

தசைகள் சுருங்காதிருக்கும்போதும், அவை தொடர்ந்த இழுவை நிலையில் தான் இருக்கும். இதனால்தான் நகர்ந்து கொண்டிருக்கும் பேருந்தில் / ரயிலில், உங்களால் கீழே விழாமல் நிற்க முடிகிறது. அச்சமயத்தில், நீங்கள் நிற்பதைப் பற்றி நினைக்காமலிருந்த போதும், உங்களின் மூளை தொடர்ந்து குறியீடுகளைக் கால் மற்றும் உடல் தசைக்கு அனுப்புவ தாலேயே நீங்கள் நேராக நிற்கிறீர்கள். உங்களின் பெரிய தசையான ஆடுதசை பலமானதும்கூட. 70 கிலோ எடையுள்ள ஒரு மனிதன், ஒற்றைக் காலை நீட்டி, பந்தை உதைக்கும்போது, ஒரு கால் மட்டுமே அவன் கீழே விழாமல், அவனது எடையைத் தாங்குகிறது. அச்சமயம், ஒரு காலின் ஆடுதசை மட்டுமே, அவன் எடையைத் தாங்க, 320 கிலோ எடையைத் தூக்குவதற்குச் சமமான சக்தியைத் தருகிறது. பாலே நடனமாடும் பெண் / ஆண், இன்னொருவரை அலாக்காகத் தூக்கிக் கொண்டு, ஒரு காலால் மட்டுமே இருவரின் எடையையும் சமன் செய்து ஆடும்போது, அவரின் ஆடுதசை 1000 கிலோவைத் தூக்குவதற்குச் சமமான சக்தியைத் தருகிறது.



ஒரு தசையில் ஆயிரக்கணக்கான தசை நார்கள் உள்ளன. ஒவ்வொரு தசை நாரும் தனியே சுருங்கினாலும், அனைத்து தசைநார்களும் ஒரே நேரத்தில் சுருங்கிச் செயல்பட்டு, ஒருங்கிணைப்புடன் இயங் குவதால்தான், கையைக் காலை மடக்க முடிகிறது. ஒரு தனி தசையால் எந்தச் செயலும் நடைபெறுவதில்லை. நிறைய தசைகளின் கூட்டுச் செயல்பாடால், மூளையின் கட்டளைக்கேற்ப, நிற்றல், நடத்தல் நடைபெறுகிறது. இவற்றில் நடனம், விளையாட்டு போன்றவை கொஞ்சம் பரம்பரை மூலமும், கொஞ்சம் தொடர்ந்த பயிற்சி மூலமும் சிறந்து விளங்க முடிகிறது. அத்லெட்ஸ், குத்துச் சண்டை மற்றும் நீச்சல் போன்றவை தொடர்ந்த பயிற்சி மூலம்தான் உருவா கிறது. சிலர் பலசாலியாகவும், சிலர் நோஞ் சானாகவும் இருப்பதும் தசைகளின் அமைப்பாலும், கொஞ்சம் பாரம்பரியத் தாலும் உள்ளது. கிட்டத்தட்ட 16 வயது வரை, பயிற்சி மூலம் பலம் வாய்ந்த தசைகளை உருவாக்க முடியும்.

ஒவ்வொரு தசையும் நீளமாகவும், உறை மூடிய தசை நார்களாலும் ஆனவை. உறை ஒளிபுகும் மீள் சக்தி உடையது. ஒவ்வொரு தசைநாரிலும் கறுநிற வரிகள் உள்ளதால், வரித்தசை எனப்படுகிறது. ஒவ் வொரு தசைக்கும் இரத்தம் தமனி வந்து, தந்துகிகளாய்ப் பிரிந்து, மீண்டும் ஒன் றிணைந்து சிரையாகி, தசையிடமிருந்து அளித்த இரத்தத்தை இதயத்திற்குக்

கொண்டு செல்கிறது. இரத்தக் குழல்களின் அருகே நரம்புகள் உள்ளன. இயங்கு தசையின் குறுக்கே வரிகள் கிடையாது. இவற்றின் தசை நார்கள் 0.13 மி.மீ. நீளமுள்ளவை. இவற்றிற்கு உறை கிடையாது. அனைத்து தசைகளும் செயல்பட சக்தி தேவை. இச்சக்தி இரத்தத்தின் மூலம் இதற்குக் கிடைக்கிறது. ஒரு செல் உயிரியான அமீபாவின் அசைவுகூட, நமது சுருக்குத் தசைபோலவே உள்ளது.

தசைகள் சுருங்கும்போது குறிப்பிட்ட அளவு வெப்பம் உண்டாகிறது. இதனால் தான், நீங்கள் அதிகமாக உடற்பயிற்சி செய்யும்போது உடல் சூடாகிறது. அதனைத் தணிக்க வியர்க்கிறது. அதேபோல்

தசைகள் திறமையுடன் செயல்பட, ஓய்வும் 6 - 8 மணி நேர தூக்கமும் அவசியம்.

குளிர்காலத்தில், குளிரைத் தாக்குப் பிடிக்க, உடல் நடுங்குகிறது. வேகமாக உடலின் தசைகள் சுருங்குவதால், உடலுக்குப் போதுமான வெப்பம் உண்டாகி, வெளிக்குளிரைத் தாங்கும் சக்தி ஏற்படுகிறது.

தசைகளிலுள்ள சக்தி தீர்ந்துபோனால், அவற்றால் இயங்க முடியாது. நீண்ட தூரம் நடந்தால், உங்களுக்கு மேலும் ஒரு அடி வைக்க முடியாத நிலை ஏற்படுவது இதனால்தான். போதுமான இரத்தம் செலுத்தப்படாவிட்டாலும், தசை இயங்காது.

உங்களின் சிரிப்பு, அழுகை, கோபம், பயம் என்று நவரச உணர்ச்சிகளை வெளிப்படுத்துபவை, முகத்திலுள்ள 40 தசைகளே! சின்ன சிரிப்புக்கு 11 தசைகளும், அழுகைக்கு 17 தசைகளும் செயல்பட வேண்டும்.

உடலில் அதிகம் உழைப்பவை கண்களின் தசைகளே! ஒரு நாளில் 10,00,000 தடவைக்குமேல் மூடித் திறந்து செயல்படுகின்றன.

எவ்வித வேலையையும் செய்ய ஒரு ஜோடி தசைகள் தேவை.

விலங்கினங்களில் மிக அதிக வேகத்தில் இயங்குபவை பூச்சிகளின் இறக்கைத் தசைகளே! நொடிக்கு 300 முறை இயங்குகின்றன. பட்டாம்பூச்சி நொடிக்கு 2218 முறை இறக்கைகளை அடிக்கிறது.

தசை பாதுகாப்பு :

* நீங்கள் நல்ல உடல் நலத்துடன் திகழ, தசைகள் பலமாகவும், நல்ல இழுவை தன்மையுடனும் இருக்க வேண்டும். நமது உணவில் புரதம் இருந்தால் மட்டுமே தசை வளர்ச்சிக்கும், பாதிப்பு ஏற்பட்டால் சரி செய்யவும் உதவும். உணவிலுள்ள சர்க்கரை தசைக்குச் சக்தியைத் தருகிறது.

* தொடர்ந்த உடற்பயிற்சியே தசைகளைச் சரிப்படுத்தி, பலப்படுத்துகிறது. உடற்பயிற்சியின்போது இதயம் வேகமாகத் துடிக்கிறது. அதிகமாகவும், ஆழ்ந்தும் மூச்சு விடுகிறோம். நுரையீரலுக்குள் நிறைய பிராண வாயு வந்து, எல்லா திசுக்களுக்கும் நல்ல உணவும், பிராண வாயும் கிடைக்கிறது. அதனால் மூளையும்கூட சுறுசுறுப்புடன் இயங்குகிறது.

* நல்ல பலமான தசை, திடகாத்திரமான, அழகான உடலைத் தருகிறது.

* தசைகள் நல்ல நிலையில் இருந்தாலும், அளவுக்கதிகமான வேலை தசைகளைத் தளர்வடையச் செய்கிறது. எனவே தசைகளுக்கு அவ்வப்போது ஓய்வு தர வேண்டும்.

* தசைகள் திறமையுடன் செயல்பட, ஓய்வும் 6 - 8 மணி நேர தூக்கமும் அவசியம்.

* வைரஸ் மூலம் ஏற்படும் போலியோ நோயினால, நரம்பு பாதிப்பு அடைவதுடன், கால்கள், வயிறு மற்றும் மார்புத் தசைகளையும் செயலற்றுவிடச் செய்கிறது.

* என்புருக்கி நோய் எலும்புகளையும், அதனைச் சார்ந்த தசைகளையும் பாதிக்கிறது. சுத்தமான சூழலும், சுத்தமான குடிநீரும் இவ்விரண்டு நோய்களிலிருந்து காப்பாற்றும்.

* தசை செயலிழப்பு நோய், பிறவியிலேயே ஏற்படுவதாகும். உயிரியல் தொழில் நுட்பத்திலுள்ள 'ஜீன் மாற்று சிகிச்சை' மூலம் இவ்வியாதி வராமல் தடுக்கலாம் அல்லது சரி செய்யலாம்.

வாத்... வாத்...

நவம்பர் இதழில் 'வாத்துகள்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். குள்ள வாத்து, கூஸ் வாத்து, அன்னம் என வாத்துகளின் அத்தனை வகைகளையும் அழகாக வரைந்து அனுப்பி அசத்தி விட்டீர்கள். பரிசு பெற்ற வாத்துகள் இங்கே உங்கள் பார்வைக்கு...



முதல் பரிசு

அ. ஜெயந்தி, ஆறாம் வகுப்பு, பி.ஆர். சித்தா நாயுடு நினைவு மெட்ரிகுலேஷன் பள்ளி, கோவை.



இரண்டாம் பரிசு

பி. கார்த்திக், சென்னை

ஓவியப்போட்டி முடிவுகள்



மூன்றாம் பரிசு
எஸ். சுஷில், ஆறாம் வகுப்பு,
பி.ஆர்.சித்தா நாயுடு
நினைவு மெட்ரிகுலேஷன் பள்ளி,
கோவை.



ஆறுதல் பரிசு
தி. ஆர்த்தி, ஏழாம் வகுப்பு,
ஜேஸீஸ் மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி,
காங்கேயம்.




ஆறுதல் பரிசு
பி. விக்னேஷ்,
ஏழாம் வகுப்பு, பாண்டிச்சேரி.

மீன்

அந்தச் சோலை சேரி கிராமத்தில் அன்று எந்தச் சேவலும் கூவாமலே விடிந்தது. அதிகாலையிலேயே எழுந்த ஊர்க்காரர்கள் அதிசயப்பட்டார்கள்.

ஒருவரையொருவர் எழுப்பி ஊரில் நடந்த அதிசயமான காரியத்தைச் சொல்லி வியந்து போனார்கள்.

சிறுவர்கள் ஒன்று திரண்டனர். எல்லா வீடுகளுக்கும் சென்று பார்த்தார்கள். எல்லா இடத்திலும் இப்படி நடந்துள்ளதா? என்ற ஆச்சரியத்தோடு ஓடி ஓடிப் பார்த்தார்கள். "இப்படியும்நடக்குமா!? எங்காவது இதுவரை நடந்துள்ளதா! ஏன் இப்படி நடந்தது? எப்படி இது நடந்தது?" கிழவிகள் மூக்கின் மேல் விரலை வைத்து சிலாகித்துப் பேசிப் பேசி மாய்ந்தார்கள். இது ஊருக்கு நல்லதுதானா? இல்லை. மாரியம்மன் ஊர் மேல் கோபித்துக் கொண்டதா? இதனால் ஏதும் கெடுதல் நடக்கக்கூடுமா?



இரவில் மழை பெய்தது. காற்று அடித்தது. இது நிஜம். ஆனாலும் என்றைக்குமில்லாத புதுமையாக இது எப்படி நடந்தது? அன்று ஒருவரும் காட்டு வேலைக்குப் போகவில்லை, நடந்த அதிசய அனுபவத்தைப் பேசினார்கள். அப்படி என்னதான் நடந்தது?

வீடுகளுக்கு முன் வாசல் தரையில் குடிசைகளுக்கு மேலே, ஓடுகளுக்கு மேலே, பயிர் குழிகளுக்குப் போடப்பட்ட பந்தல்களுக்கு மேலே, வைக்கோல் படப்புகளில், தெருக்களில் எல்லா இடங்களிலும் மீன்கள்! மீன்கள்! மீன்கள்!

வானத்திலிருந்து விழுந்துள்ளனவா? மிளகாய் அளவு முதல் அவரைக்காய் அளவு வரையிலான மீன்கள் எங்கும் விழுந்திருந்தன. வானத்தில் மீன்கள் எப்படி இருக்கும்? இது எப்படித்தான் நடந்திருக்கும்?

மீன்களைச் சிறுவர்கள் கூடைகளில் பொறுக்கிப் போட்டார்கள்! சில மணி நேரங்களில் எங்கும் ஒரு மீன்கூட இல்லை. எல்லாம் பொறுக்கி எடுத்தாகி விட்டது.



ஊர் நாட்டாண்மை எல்லா வீடுகளுக்கும் சொல்லியனுப்பி ஊர்க் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து கூட்டமும் கூடி விட்டது. பல்வேறு அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் ஆளுக்கு ஆள் பேசினார்கள்.

'போன வருசம் அம்மனுக்குப் படையல் போட்டுத் திருவிழா நடத்தவில்லை – அதனால் அம்மாவின் கோபமே காரணம்' என்று பலரும் பேசினார்கள். 'அதனால் அடுத்த மாதமே அம்மனுக்குப் பொங்கல் வைக்கலாம்' என்றும் பலர் கூறினார்கள். அதற்குள் செய்தி அடுத்துள்ள நகரத்திற்கு எப்படியோ பரவிவிட்டது.

பெரியவர்கள், சிறுவர்கள் என்று சோலை சேரி கிராமத்திற்கு ஆட்கள் வரத்



மழை!

கொ.மா.கோதண்டம்

தொடங்கினார்கள். பத்திரிகை செய்தியாளர்களும் கேமிராவுடன் வந்து விட்டார்கள். சோலைசேரியில் மீன் மழை விழுந்ததாமே! பார்த்து வரலாமே என்று பலரும் கூடினார்கள். ஆனால் பார்ப்பதற்கும் படம் எடுப்பதற்கும் அங்கே எந்த ஒரு மீனும் தட்டுப்படவில்லை. விழுந்ததை எடுத்துக்கொண்டார்கள் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.


''எல்லோரும் கேளுங்க. நான் ஒரு யோசனை சொல்றேன். எங்க ஊரு பையங்க சில பேரு அப்பப்ப மேல காட்டு அய்யனார் கோவிலுக்குப் போயி அங்குள்ள மலைசாதி சிறுவன் நீலன்னு ஒரு பயலைக் கூட்டிட்டு வருவாங்க. அவன் கொஞ்சம் கெட்டிக்காரன்'' என்றான் ஒருவன்.

''இவன் என்னப்பா, நாம் பத்தாவது படிக்கிறோம். வரலாற்றுல, அறிவியல் புத்தகங்கள்ள இப்படி நடக்குமுன்னு ஒரு செய்தியில்லே. இதைப்போயி காட்டுப் பையன்கிட்ட கேட்டா தெரியுமா? போங்கடா.''

''ஏன் அதையும்தான் என்னன்னு பார்த்திடுறது?''

''சரி இப்ப அவனை எப்படி கூட்டிட்டு வர்றது?''

''ஏம்பா உங்க ஊர்ல ஸ்கூட்டர் வண்டி யாரு வச்சிருக்கா? ரெண்டு வண்டிக்கு ஏற்பாடு செய்யுங்க. மூணு பேரு போவோம். அய்யனார் கோவில் போயி அவனையும் பின்னால உட்கார வச்சி கூட்டிட்டு வரலாம். பிளாஸ் டூ படிக்கிற ரெண்டு



''ஒரு மாலை போட்டா ஒன்பது மாலைக்குச் சமங்க!''

''என்ன மாலைங்க?''

''நவரத்ன மாலை!''

— பொறையாறு கங்காகணேசன்

● ●

பையங்க ஸ்கூட்டர்லதான டவுனுக்குப் போறாங்க. அவங்கள கேட்கலாமே.''

மூன்று மாணவர்கள் டூவீலர் வண்டிகளில் சென்று ஆதிவாசிச் சிறுவன் நீலனிடம் நடந்ததைச் சொல்லி அழைத்து வந்தார்கள்.

பாதி வழி வரும்போது நீலன் கேட்டான்:

''உங்க ஊரு பக்கத்துல பெரிய ஏரி, கம்மாய் ஏதாவது இருக்கா?'' என்று கேட்டான்.

''ஆமாம். ஊருக்குத் தெற்கே கடம்பன் ஏரின்னு ஒரு கம்மாய் இருக்கு. ரொம்பப் பெரிய கண்மாய்தான் அது. அதுக்கு என்ன?''

''சரி, மொதல்ல என்னை அங்கே கூட்டிட்டுப் போங்க'' — நீலன். ''எதுக்குப்பா ஊருக்குள்ளே வான்னா, நீ கம்மாயைக் காட்டுங்கன்னு சொல்ற?''

''மொதல்ல அங்கே போங்க. அப்புறம் ஊருக்குள்ள போகலாம்''. ''சரிப்பா மொதல்ல கடம்பன் ஏரிக்கே போவோம்''

அவர்கள் அங்கே போய் இறங்கினார்கள். நீலன் கண்மாயைக் கூர்ந்து பார்த்தபடி நடந்தான்.

ஒரு இடத்தில் கண்மாய் தண்ணீரில் இறங்கி நின்று கொண்டு தரையைப் பார்த்து காலோடு நீரில் ஒரு எத்து எத்தினான். தண்ணீரோடு பொடிப் பொடி மீன்களும் தரையில் போய் விழுந்தன. அவை தரையில் துள்ளி துள்ளி குதித்தன. ''இந்தக் கம்மாயில எப்பவும் இப்படி மீன் இருக்குமா?'' நீலன் கேட்டான்.

''இல்லப்பா பஞ்சாயத்து போர்டுல இருந்து அதிக உற்பத்தி ஆகுமுன்னு புது வகை மீன்களை இந்த வருஷம் விட்டு வளர்க்குறாங்க. அதுதான் இப்படி நிறைய மீன்கள் பெருகியிருக்கு.''

''சரி வாங்க ஊருக்குள்ள போகலாம்'' என்று நீலன் சொன்னதும் அவர்கள் ஊருக்குள் நுழைந்தனர். எல்லோரும் இவர்களை வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள்.

ஒரு சிறுவன் வீட்டுக்குள்ளே ஓடிச் சென்று கூடையில் இருந்த மீன்களைக் கொண்டு வந்து நீலனுக்கு முன்பு தரையில் கொட்டினான். அதில் சிலவற்றை எடுத்துக் கூர்ந்து பார்த்தான் நீலன். அப்போது அங்கு வந்த ஊர் நாட்டாண்மை ''என்னடா உனக்கு என்ன தெரியுது?'' சிறிது அதட்டலாகவே கேட்டார்.

''சாமி! நேத்து இரவில மழை விழுந்தபோது காத்து பலமா அடிச்சிதா?''


''மழை லேசா தூறல்தாம்பா. காத்து சத்தமும் பலமா கேட்டுச்சி. யாரும் வெளியே வந்து பார்க்கலே. அதுக்கு என்ன இப்ப?'' என்றார் நாட்டாண்மை.

''சாமி, கடம்பன் ஏரிப்பக்கம் இருந்து பெரிய சூறாவளி சுழல் காற்று வந்துருக்கு. அந்தக் காத்து ஏரி தண்ணிய அப்படியே மீன்களோடு தூக்கிட்டு வந்திருக்கு. ஊர்ப் பக்கம் வரும்போது சூறாவளி வலு இழந்து போச்சு. ஏரித் தண்ணியும் மீன்களும் தூத்தலா விழுந்திருக்கு'' — நீலன்.

அனைவரும் நீலனை அதிசயத்துடன் பார்த்தனர். ''சரிப்பா எப்படி இதுதான்னு உறுதியா சொல்றே?'' என்றார் ஒருவர். ''சாமி, முன்னாடி ஒரு தடவை வத்ராப்பு மலையடிவார ஊருல எங்க மாமன் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே இப்படி ஒரு சமயம் நடந்தது. அதான் சொல்றேன்.''

இயற்கையின் விளையாட்டை அனுபவபூர்வமாக நமக்குத் தெரியாத உண்மையை அழகாக சொல்லிட்டானே! இவனுக்கு இன்னிக்கு என் வீட்டுல விருந்து'' என்றார் நாட்டாண்மை.

சிறுவர்கள் நீலனைத் தூக்கிக் கொண்டு ஒரு ஊர்வலமே நடத்தி விட்டார்கள்!



வால் அறுந்த படம் சூப்பர்!

சூப்பர் படம்!

'வால் அறுந்த பிங்கி' கதைக்கு ரொம்பவும் தமாஷாக வரைந்த ஓவியர் சேகருக்குப் பாராட்டுகள். என் பள்ளியிலும் கதையைக் கூறி படத்தைக் காட்டினேன். அனைவரும் மிகவும் ரசித்தனர்.

— கே. பிரதீபா,
எட்டாம் வகுப்பு,
மன்னார்குடி.

அன்பால்...

'ஆக்டோபஸு'டன் அரைமணி நேரம் கட்டுரையில் படங்கள் பளிச்சென்று இருந்தன. கட்டுரை மூலம் நிறைய தகவல்கள் அறிந்து கொள்ள முடிந்தது. பகையை வென்ற அரசர் படக்கதை வெகு அருமை. அன்பால் எதையும் சாதிக்கலாம் என்பதை எளிமையாக அறிவுறுத்தியது.

— வி.ஆர். கிருத்திகா,
திருச்சி.

திருவிழா!

குழந்தைகள் தினம் நம் நாட்டில் மட்டும்தான் கொண்டாடப்படுகிறது என்று நினைத்திருந்தேன். ஆனால் பல நாடுகளில் திருவிழாவாகவே நடத்தப்படுவது குறித்து ஆச்சரியமடைந்தேன்.

— என்.எஸ். பத்மநாபன்,
உளுந்தூர்பேட்டை.

சிரிப்பு...

அறிஞர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் மிகவும் சுவையாக இருந்தன. அதி லும் 'செருப்பைத் தேடிச் சென்ற கடிகாரம்' வயிறு குலுங்க சிரிப்பை வரவழைத்துவிட்டது!

— எல். மாலதி,
ஒன்பதாம் வகுப்பு,
காஞ்சிபுரம்.

தீபாவளி மூட்

கோகுலத்தைப் பார்த்ததும்தான் எனக்குத் 'தீபாவளி மூட்' வந்தது. தீபாவளி பற்றிய விவாதம் சுவையாக இருந்தது. 'எங்கள் பள்ளியில் நடந்தது' பகுதியில் அனைத்து அனுபவங்களும் நன்றாகச் சிரிக்க வைத்து விட்டன.

— சி. செந்தில்,
திருத்துறைப்பூண்டி.

ஓயாத உழைப்பாளி

இதயத்தின் வேலைகளைப் புரியும்படி எளிமையாகத் தந்த கோகுலத்துக்கு நன்றி. தென் ஆப்பிரிக்காதான் கோப்பையைக் கைப்பற்ற போகிறது என்பதை நீங்கள் முதலிலேயே முடிவு செய்துவிட்டீர்கள் போலிருக்கிறது. போஸ்டரில் அவர்களின் படங்கள் வந்ததைத்தான் குறிப்பிடுகிறேன்.

— ஆர். சரத்சந்திரன்,
பத்தாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
ஆரணி.

கோகுலம் சுழல்கோப்பை

சுழல் கோப்பை இந்த ஆண்டு எந்தப் பள்ளிக்குக் கிடைக்கப் போகிறது என்பதில் நீங்கள் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பதை அறிய முடிகிறது. அடுத்த மாதம் தெரிந்துவிடப் போகிறது. வாழ்த்துச் சொல்ல தயாராகுங்கள்!




பேனா எப்படி உருவானது?

பழங்காலத்தில் இந்தியாவில் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதினார்கள்.

ரோம் நாட்டில் பலகையில் மிருதுவான மெழுகைப் பூசி, அதன்மேல் கூர்மையான உலோகத்தால் எழுதினார்கள்.

காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நாணலை வெட்டி கூர்மையாகச் சீவி அந்தக் கூர்மையான பகுதியை மையில் தோய்த்துக் காகிதத்தில் எழுதினார்கள்.




பின்னர் வாத்தின் இறகு எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இறகு லத்தீன் மொழியில் 'பென்னா' என்று அழைக்கப்படுகிறது. இதிலிருந்து 'பென்' என்ற ஆங்கில வார்த்தை உண்டானது. இது தமிழில் பேனா என்று அழைக்கப்படுகிறது.

1780-ல் பர்மிங்ஹாமைச் சேர்ந்த சாமுவேல் ஹாரிசன் இரும்பினால் ஆன பேனாவைக் கண்டுபிடித்தார். இரும்பினால் குழாய் செய்து அதன் நுனிப் பகுதியைக் கூர்மையாக்கிப் பேனாவை உருவாக்கினார்.

1809-ல் பிராமா என்பவர் இறகைப் பேனா முள்போல் வெட்டி, அதை ஒரு கைப்பிடியில் சொருகி வைத்துப் பேனாவை உருவாக்கினார். இறகுமுள் தேய்ந்து போகாமல் இருக்க அதன் முனையில் தங்கத்தில் முள் அமைக்கப்பட்டது. இதைக் கண்டுபிடித்தவர் சார்ல்ஸ்வாட். 1818-ல் இது கண்டுபிடிக்கப்பட்டது.


1822-ல் ஜான் ஹாக்கின்ஸ் கொம்பினாலும், ஆமை ஓட்டினாலும் ஆன பேனாவைச் செய்தார். அதே ஆண்டில் ஜான்மிச்சல் என்பவர் மரக்கட்டையால் ஆன

பேனாவைக் கண்டுபிடித்தார். எந்திரத்தின் உதவியால் பேனாக்களை உற்பத்தி செய்தார்.



பர்மிங்ஹாம் நகரைச் சேர்ந்த தொழில் அதிபர்களான ஜேம்ஸ் பெர்ரி, ஜோசப் கில்லட், ஜோசய்யா மேசன், மிச்சலுடன் கூட்டுச் சேர்ந்து பேனாவைப் பற்றி ஆராய்ந்தார்கள். பெர்ரி மத்தியில் துவாரமுள்ள நிப்புகளைத் தயாரித்தார். மேசன் இந்த நிப்புகளை உருவாக்க புதுவகையான உலோகத் தகடுகளைத் தயாரித்தார். கில்லட், இந்தத் தகடுகளைக் கொண்டு நிப்புகளைத் தயாரிக்கும் எந்திரத்தைக் கண்டுபிடித்தார். இவர்கள் நான்கு பேரும் சேர்ந்து கட்டையால் ஆனதும் உலோகத்தால் ஆன நிப்புகளைக் கொண்டதுமான பேனாக்களைக் கண்டுபிடித்தார்கள். பர்மிங்ஹாம் நகரில் தயாரிக்கப்பட்ட இந்தப் பேனாக்கள் உலகப் புகழ் பெற்றன.

மைக்கூட்டில் உள்ள மையைக் கட்டைப் பேனாவால் தொட்டு எழுதப்பட்டு வந்தது. இதற்குப் பதிலாக பேனாவிலேயே மையை நிரப்பி எழுதக் கூடிய பேனாக்களைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சிகள் நடந்தன. இந்த முயற்சியின் பலனாக ஊற்றுப் பேனா கண்டுபிடிக்கப்பட்டது. பிரட்ரிக் பால்ஷ், பிராமா ஆகிய இருவரும் சேர்ந்து ஊற்றுப் பேனாவைக் கண்டுபிடித்தார்கள். ஆனால், இவர்கள் கண்டுபிடித்த பேனா சரியாக எழுதவில்லை.



1883ல் லூயிஸ் வாட்டர்மேன் என்ற அமெரிக்கர் புதிய ஊற்றுப் பேனாவைக் கண்டுபிடித்தார். இந்தப் பேனாவில் கழுத்துப் பகுதியோடு ஒரு ரப்பர் பை இணைக்கப்பட்டது. அந்த ரப்பர் பையில் மை அடைக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இந்த ரப்பர் பையில் மையை நிரப்ப வேண்டியிருந்தது. பின்னர் ரப்பர் பையைத் தொட்டுக் கொண்டிருக்கும் உலோகத் தகட்டை இயக்குவதன் மூலம் மையை நிரப்பும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பேனாவின் நிப்பு 14 காரட் தங்கத்தால் உருவாக்கப்பட்டது. அதன் முனை பிளாட்டினத்தால் அமைக்கப்பட்டது.

ஜே.ஜே. லெளடு என்பவர் 1888-ல் குண்டுமுனைப் பேனா அதாவது பால் பாயிண்ட் பென் பற்றிச் சிந்தித்தார். ஆனால் இந்தப் பேனாவைக் கண்டுபிடிப்பது பற்றி 1944 வரை யாரும் ஆராய்ச்சி செய்யவில்லை. யுத்த சமயத்தில் விமான ஓட்டிகளுக்கு எவ்வளவு உயரத்தில் பறந்த போதிலும், மை கசியாமல் எழுதக் கூடியதும், ஒரு தடவை மை போட்டுக் கொண்டால் நீண்ட காலம் எழுதக் கூடியதுமான பேனா தேவைப்பட்டது. எனவே, பால் பாய்ண்ட் பேனா கண்டுபிடிக்கப்பட்டது.

சிக்காகோ நகரத்தைச் சேர்ந்த மில்டன் ரெய்னால்டு பால் பாய்ண்ட் பேனாவைக் கண்டுபிடித்தார். இதில் 1 மில்லிமீட்டர் விட்டமுள்ள இரும்புக் குண்டு இருக்கும். அதன் மேல் இணைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் குழாயில் கெட்டியான மை அடைக்கப்பட்டிருக்கும். இரும்புக் குண்டின்மேல் உள்ள சிறிய துவாரத்தின் வழியாக மை சீராக வந்து கொண்டிருக்கும். இந்தப் பேனாவினால் தொடர்ந்து எழுதலாம். மழையிலும், நீரின் அடியிலும் இருந்து கொண்டும் கூட இந்தப் பேனாவால் எழுத முடியும்.

- மா. ராஜாமணி



போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்!

பிரளம்பாசூரன் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? கோகுல் கிருஷ்ணனையும் பல்ராமனையும் கொன்று விடுவதற்காகக் கம்சனால் அனுப்பப்பட்ட பல்ருள் ஒருவன், இந்த பிரளம்பாசூரன்!

இவனுடைய போக்கே அலாதி! தானும் ஒரு இடையர் குலச் சிறுவன் போல் வேஷம் தரித்து மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் சேர்ந்துகொண்டான். அண்ணன் பல்ராமனுடன் விளையாடி அவர்களுடைய உற்ற நண்பன் போல் நடித்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றான்!

மாடு மேய்க்கும் சிறுவர்கள் அவற்றை மேய விட்டு விட்டு விளையாடுவது வழக்கம். இரண்டு அணிகளாகப் பிரிந்து விளையாடுவார்கள். ஓர் அணிக்குக் கண்ணனும் மற்றொரு அணிக்குப் பல்ராமனும் தலைவர்கள். ஆட்டத்தில் தோற்பவர்கள் வென்றவர்களைத் தங்கள் முதுகில் சுமந்துகொண்டு குறிப்பிட்ட தூரம் வனத்தில் ஒருமுறை சுற்றி வர ஓட வேண்டும்! பிரளம்பாசூரன் கிருஷ்ணனுடைய அணியில் இருந்தான்.


முதலில் பல்ராமனுடைய அணி தோற்றுவிட்டது. அவர்கள் கிருஷ்ணனுடைய அணியைச் சேர்ந்தவர்களை முதுகில் சுமந்து வனத்தில் வட்டமடித்து ஓடி வந்தார்கள். அடுத்த தடவை பல்ராமனுடைய அணி வென்றுவிட்டது. அப்போது கண்ணன் அணியைச் சேர்ந்தவர்கள் பல்ராமன் அணியினரை முதுகில் சுமந்து ஓட வேண்டிய நிலை. பிரளம்பாசூரன் முந்திக்கொண்டு சென்று பல்ராமனைத் தன் முதுகில் ஏறி அமருமாறு கேட்டுக்கொண்டான். பல்ராமன் அவ்வாறே செய்ய, பிரளம்பாசூரன் ஓடிச் செல்கையில் மற்றவரிடமிருந்து சட்டென்று பிரிந்துபோய், தனியிடத்தில் அப்படியே ஆகாயத்தில் எழும்பி பறக்கத் தொடங்கிவிட்டான்! அவன் முதுகில் இருந்த பல்ராமன் இது அசுரனுடைய செயல் என்பதைப் புரிந்து கொண்டான். கோபம் மிக, தனது உள்ளங்கையை முஷ்டியாக்கி அசுரனுடைய தலையில் ஓங்கிக் குட்டினான். அவ்வளவுதான்! பிரளம்பாசூரன் கீழே விழுந்து இறந்தான். அவன் வேஷம் கலைந்தது. அசுரனை வென்ற பல்ராமனை கண்ணனும் மற்ற கோபாலர்களும் வாழ்த்தினார்கள்.

நமது வாழ்க்கையிலும் இப்படி நண்பர்களைப் போல் நடித்து ஏமாற்றுவோர் உண்டு. எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்ததும் முன் பின் தெரியாத யாரேனும் உங்களை அணுகி புன்னகையுடன் பசப்பலான வார்த்தைகளையும் பேசக்கூடும். இவர்கள் இனிக்க இனிக்க பேசி உங்களைத் தவறான வழிகளில் இழுத்துவிட்டு தீய பழக்கங்களுக்கு அடிமையாக்கி விடுவார்கள். இத்தகைய பிரளம்பாசூரர்களிடமிருந்து தப்ப பல்ராமனுக்கு இருந்தது போன்ற பலம் உங்களுக்கு இல்லாது போகலாம். ஆனால் பல்ராமனுக்கும் கண்ணனுக்கும் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து பாடம் கற்கும் அறிவு உங்களுக்கு இருக்கிறது. போலி நண்பர்களை இனம் கண்டு ஒதுங்கி விடுங்கள். வந்தபின் போராடுவதைவிட வருமுன் காப்பது நல்லதல்லவா.

— ஆசிரியர்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

வண்ணம் தீட்டுங்கள்!





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001 •
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 • Registered as a Newspaper in Srilanka